# ஆட்டுக்குட்டியானவரின்
# பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள்



அப்போஸ்தலர்களின் வாழ்க்கையில் இருந்து
பெறக்கூடிய விலையுயர்ந்த பாடங்கள்

# ஆட்டுக்குட்டியானவரின்
# பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள்



அப்போஸ்தலர்களின் வாழ்க்கையில் இருந்து
பெறக்கூடிய விலையுயர்ந்த பாடங்கள்

**ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள்** என்ற இந்தப் புத்தகத்தை நாங்கள் வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். அப்போஸ்தலர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தைப் பற்றிக் கொலம்பஸ், ஒஹியோ வேத மாணவர்களின் பிள்ளைகளுக்குரிய நிகழ்ச்சிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது. தேவனுடைய நாமம் மகிமைப்பட இந்தியாவில் உள்ள வேத மாணவர்களும் இந்த அப்போஸ்தலர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை அறிந்து ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர நாங்கள் இந்தப் புத்தகத்தை தமிழில் மொழி பெயர்த்திருக்கிறோம்.

இதை வாசிக்கக் கூடியவர்களுக்கு சில அறிவுரைகளைச் சொல்ல விரும்புகிறோம். இந்தப் புத்தகத்தில் அப்போஸ்தலர்களுடைய வாழ்க்கைச் சரித்திரம் மட்டும் அல்லாமல். அதின் மூலமாக கிறிஸ்தவ வாழ்க்கையின் வளர்ச்சிக்கு நமக்கு கிடைக்கும் பாடங்கள் அநேகமாக இருக்கிறது. ஆழமான சத்தியங்களை இந்தப் பாடங்கள் நமக்குப் போதிக்காவிட்டாலும். அடிப்படையான அநேக காரியங்களைக் குறித்துப் போதிக்கிறது. கதைகளை விரும்பிக் கேட்கக்கூடிய பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய வாழ்க்கைக்கு இது மிக உற்சாகம் ஊட்டக்கூடியதாக இருக்கும். இந்தப் பாடங்களை வாசிக்கும்போது பகுதி பகுதிகளாக வாசித்து அதின் அர்த்தங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தப் புத்தகத்தைக் கற்றுக் கொடுக்கக்கூடியவர்கள், இதில் உள்ளதை தெளிவாக வாசித்து பின்பு அதன் அர்த்தங்களைச் சொல்ல வேண்டும். சில வேத வசனங்களை ஆதாரமாகக் கொடுத்திருக்கும் பகுதிகளை வாசித்தால் புரிந்துகொள்ள மிகவும் உபயோகமாக இருக்கும்.

அநேக வேதாகம அகராதிகளில் இருந்து விளக்கங்கள் எடுக்கப்பட்டுள்ளது ஆனாலும் பெரும் பகுதிகளை சகோ.ரசல் எழுதிய பிரதிகளில் இருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தை வெளியிடுவதின் நிமித்தமாக நம்முடைய வருங்காலச் சந்ததிகள் நிச்சயமாக பயன் அடைவார்கள் என்று நம்புகிறோம். ஆகவே நாங்கள் அனைவரும் இதை நினைத்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். நீதியையும், சத்தியத்தையும் விதைப்பதற்கு பிள்ளைகள் நல்ல நிலங்களாக இருக்கிறார்கள். அநேகர் முற்பிதாக்களுடைய பாதையில் நடந்து இந்த மனுகுலத்தைப் பெரும் பாதையில் நடத்துவார்கள். நம்மால் இயன்ற மட்டும் நாமும் இந்த ஆயத்தப் பணியைச் செய்வோம். ஒரு வேளை ஆண்டவர் அவர்களை கிறிஸ்துவின் சரீரமாக மாறுவதற்கு அழைத்திருந்தால், நாம் அவர்களுக்கு நிச்சயமாக சத்தியத்தைச் சாட்சியாக அறிவித்து, மகிழ்ச்சி அடைவோமாக.

கிறிஸ்துவுக்குள் அன்பான,

வேத மாணவர்கள்

சங்கிலியாண்டபுரம் கிளை,

திருச்சி –1.

## ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள்


பாடம் -1 ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் அவர்கள் அழைக்கப்பட்ட அழைப்பும், ஊழியமும்

பாடம் -2 அப்போஸ்தலனாகிய அந்திரேயா

பாடம் -3 அப்போஸ்தலனாகிய பேதுரு

பாடம் -4 கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்குப் பின்பு அப்போஸ்தலனாகிய பேதுரு.

பாடம் -5 அப்போஸ்தலனாகிய பிலிப்பும், நாத்தானியேலும்

பாடம் -6 அப்போஸ்தலனாகிய யாக்கோபு

பாடம் -7 அப்போஸ்தலனாகிய யோவான்

பாடம்-8 அப்போஸ்தலனாகிய தோமா

பாடம் -9 அப்போஸ்தலனாகிய மத்தேயு

பாடம்-10 அப்போஸ்தலனாகிய சிறிய யாக்கோபு, ஸ்காரியோத் அல்லாத யூதாஸ், கானானியனான சீமோன்

பாடம் -11 அப்போஸ்தலனாகிய யூதாஸ்காரியோத்

பாடம் -12 காட்டிக் கொடுத்த யூதாசுக்குப் பதிலாகத் தேர்வு செய்யப்பட்டவர்.

பாடம் -13 அப்போஸ்தலனாகிய பவுல்

பாடம்-14 பன்னிரெண்டு அப்போஸ்தலரின் பணி தொடர்கிறது





# பாடம் 1
# ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் அவர்கள் அழைக்கப்பட்ட அழைப்பும், ஊழியமும்

அப்போஸ்தலர் என்பதற்கு, தூது கொடுக்க அனுப்பப்பட்டவர் என்று அர்த்தமாம். அனுப்பினவர் அவர்களைத் தேர்வு செய்து விசேஷமான ஊழியத்திற்கு என்று பிரித்தெடுத்து முழு அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளாக அனுப்பப்படுகிறார்கள்.

இயேசு தன்னுடைய ஊழியத்தின் தொடக்கத்தில் இப்படிப்பட்ட பன்னிரெண்டு பேரைத் தேர்வு செய்தார். அவர்கள் சுவிசேஷத்தின் விசேஷமான செய்திகளைப் போதிப்பதற்காக அழைக்கப்பட்டார்கள். சீமோன், பேதுரு,அந்திரேயா, யாக்கோபின் சகோதரரான யோவான், பிலிப்பு, நாத்தானியேல், பர்த்தலமேயு, தோமா , மத்தேயு, யாக்கோபு கானானியனாகிய சீமோன், யூதாஸ்காரியோத் (அப்போஸ்தலனாகிய பவுல் இவருக்குப் பதிலாகத் தேர்வு செய்யப்பட்டவர் ) என்பவர்கள். (மத்தேயு 10:2-5)

பிதாவாகிய தேவனின் ஆலோசனையின் பேரில் இயேசு 12 அப்போஸ்தலர்களைத் தேர்வு செய்தார். இவர்களை மிகவும் அக்கரையோடு கவனித்து வழிநடத்தினார். சத்தியத்தையும் அதனுடைய முக்கியத்துவத்தையும், சத்தியம் போதிக்க வேண்டிய விதத்தையும் அதற்குள் வாழக்கூடிய வாழ்க்கையையும் குறித்து அவர்களுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டு வந்தார். ஆகவே இயேசு கிறிஸ்துவின் உபத்திரவங்களையும் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் குறித்து இந்த 12 அப்போஸ்தலர்கள் விசேஷமான சாட்சி பகர்ந்தார்கள். நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய

நாமத்தை வெளிப்படுத்தினேன், அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். "நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன், அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன், உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே". (யோவான் 17:6-9)

"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல, அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். (யோவான்-17:21)

ஆகவே இந்த அப்போஸ்தலர்கள் சுவிசேஷ யுகத்தின் சபைக்கு விசேஷமான ஆசிரியர்களும் அஸ்திபாரக் கற்களுமாக வாழ்ந்தார்கள். (எபேசியர் 2-20)

கிறிஸ்து இந்த 12 பேரைத் தேர்வு செய்யும் போது சிறந்த பேச்சாளர்களையோ, ஐசுவரியவான்களையோ அந்தஸ்தில் உயர்வானவர்களையோ அவர் தேர்வு செய்யவில்லை. சாந்தமும், மனத் தாழ்மையும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருந்தவர்கள் மேல் கண்ணோக்கமாய் இருந்தார். ஐந்து சீடர்கள் மீன் பிடிப்பவர்களாகவும், ஒருவர் வரிவசூலிப்பவராகவும் வேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றவர்களைப் பற்றி ஏதும் குறிப்பிடப்பட வில்லை யூதாஸ்காரியோத்து கலிலேயாவிலிருந்து வந்தவர். அவரைத் தவிர மற்றவர்கள் எந்த வித படிப்பறிவும் இல்லாதவர்கள் (அப்போஸ்தலர் 2:7)

ஆகவே பிதாவாகிய தேவன் அவருடைய மகத்துவம் நிறைந்த நித்தியமான வேலைகளுக்கு மிகவும் எளிமையானவர்களைத் தேர்வு செய்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். (1 கொரிந்தியர் 1:-26-29)

இந்த 12 நபர்களும் தேவனுடைய சிறந்த சிருஷ்டிப்பான ஒரே பேரான குமாரனின் சாயலாக மாறுவதற்கு அழைக்கப்பட்டார்கள். இயேசு இந்த அப்போஸ்தலர்களை விசேஷமான ஆவியின் வரங்களால் நிரப்பினார்.

எடுத்துக் காட்டு – வியாதியஸ்தர்களைக் குணப்படுத்துவது. இது அப்போஸ்தலர்கள் பெற்ற ஆவிக்குரிய வரமாகும். அந்தக் காலத்தில் உள்ள சீடர்கள் இந்த உலகத்தின் ஐசுவரியங்களைச் சேர்த்துக் கொள்ள இப்படிப்பட்ட வரங்களை உபயோகப்படுத்தவில்லை. ஆனால் இன்றைக்கு போதகர்கள் என்று தங்களை அழைக்கக்கூடிய அநேகர் இந்தக் காரியங்களைத் தவறாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இயேசுவின் அப்போஸ்தலர்கள் சுவிசேஷ வேலைகளுக்கு எந்த விதமான கூலியும் பெறவில்லை, சிலர் தங்களுடைய தேவைகளுக்கு வேலை செய்தார்கள்.

தேவனுடைய குமாரனாகிய இயேசு அப்போஸ்தலர்களுடன் மூன்றரை வருடங்கள் மிகவும் நெருங்கி வாழ்ந்தார். ஆனாலும் அவர்கள் கிறிஸ்துவின் ஊழியத்தையும் நோக்கத்தையும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. இயேசு இஸ்ரயேலைக் கொண்டு இந்த பூமியில் ஓர் ஆட்சியை ஸ்தாபிக்கப் போகிறார் என்று சீடர்கள் எதிர் பார்த்தார்கள். இது இயேசுவின் மரணத்திற்குப் பின்பு சுமார் இரண்டாயிரம் வருடத்தில் நிறைவேறக்கூடிய ஒன்றாக இருந்தது. இயேசு, பரலோகத்தில் ஸ்தாபிக்கப்படப் போகிற ராஜ்யத்தைக் குறித்து, அவர்களுக்குப் புரிய வைக்க முயற்சி செய்தார். ஆனாலும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்னுடைய இராஜ்யம் இந்த உலகத்திற்கு உரியது அல்ல, என்று அநேக முறை போதித்தார். (யோவான் 18:36) பெந்தகோஸ்தே நாளின் போது தேவன் அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த பரிசுத்த ஆவியின் மூலமாக அவர்கள் இயேசுவையும் அவருடைய ஊழியத்தையும் நன்றாகப் புரிந்து கொண்டார்கள். தேவனுடைய நாமத்தில் அமைக்கப்படும் சபைக்கு இயேசுவின் மேல் விசுவாசம் உள்ளவர்களுக்கு இந்த ஊழியமே முக்கிய நோக்கமாயிருந்தது. இந்த ஊழியத்தில் பங்கெடுப்பவர் சகல விதமான உலகப் பிரகாரமான காரியங்களை வெறுத்து இயேசுவைப் பின்பற்ற வேண்டியதாக இருந்தது. ஆதாமின் பாவத்திற்காக இயேசு தன்னுடைய

ஜீவனை விலைக் கிரையமாகக் கொடுத்தார் என்பதையும் உணர்ந்து கொண்டார்கள். உயிர்த்து எழுந்த இயேசுவைத் தரித்துக் கொண்ட அவர்கள், ராஜ்யத்தின் அனைத்து வாக்குறுதிகளையும், ஆதாமுக்குள் இழந்த ஜீவன் திரும்பக் கொடுக்கப்படும் என்று நம்பினார்கள்.

இந்த ஊழியத்தின் நிமித்தம் கிறிஸ்துவின் சீஷர்கள் அநேக உபத்திரவங்களுக்கு உட்படுவார்கள் என்பதையும் அவர்கள் பெற்ற தேவனுடைய வல்லமை அவர்களுக்கு உணர்த்தியது. (11 தீமோத்தேயு 3:12)

இந்தச் சத்தியத்தின் சுவிசேஷ ஊழியத்திற்காகவே அனுப்பப்பட்டார்கள். அவர்கள் தேவன் மேலும் இயேசுகிறிஸ்துவின் மேலும் வைத்த அன்பின் நிமித்தமாக ஒற்றுமையாக வாழ்ந்து ஊழியம் செய்து அனைவருக்கும் இந்த சுவிசேஷ செய்திகள் போய்ச் சேர்வதற்கு தங்களுடைய ஜீவனையும் விட்டார்கள்.

நாம் அனைவரும் அவர்கள் சத்தியத்தின் மேல் வைத்த வைராக்கியத்தையும் அன்பையும் சற்று நினைத்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அஸ்திபாரக் கற்களாக ஆட்டுக் குட்டியானவரின் 12 அப்போஸ்தலர்களை நமக்குத் தந்த பிதாவாகிய தேவனை, இயேசுவின் மூலம் நாம் ஸ்தோத்தரிப்போம். (வெளி 21-14)







# பாடம் 2
# அப்போஸ்தலனாகிய அந்திரேயா

கலிலேயாவில் உள்ள பெத்சாயிதாவில் வாழ்ந்து வந்த யோவன்னாளுக்கும், யோனாவுக்கும் பிறந்தவர் இந்த அந்திரேயா. உலக காரியங்களில் ஆர்வம் குறைந்த ஒரு இளைஞனாக இருந்தார். அவர் மீன் பிடிக்கும் தொழிலில் இருந்தாலும் அவருடைய வாழ்க்கையில் தேவனுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தார். இஸ்ரயேல் ஜனங்கள் மேசியாவை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கும் காலத்தில், இவர் யோவான் ஸ்நானகனுடைய சீஷராக இருந்தார். இஸ்ரயேலரின் கொடூரமான மத அதிகாரிகளுக்கு யோவான் ஸ்நானகன், அந்திரேயாவையும் இன்னும் சிலரையும் அவர்களுடைய நீதி செயல்களுக்காக எடுத்துக் காட்டினார். "அரசர்களுக்கு இவர் அரசர்" என்று வாக்களிக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தைச் சொன்ன விசுவாசமுள்ள தீர்க்கதரிசிகளில் இவர் கடைசியாக இருந்தார்.

யோவான் ஸ்நானகனுடைய ஊழியத்தின் நிமித்தமாக, அந்திரேயா தன்னுடைய தொழிலை விட, ஆவிக்குரிய காரியங்களை அதிகமாகச் சிந்திக்க ஆரம்பித்தார். அவருடைய வாழ்க்கை முற்றிலுமாக மாறுவதற்கு ஏற்ற ஒரு சம்பவம் நடக்க இருந்தது. அந்தச் சம்பவத்திற்கு அவருடைய இருதயம் தகுதியானது. (மத்தேயு 3:13-17) யோர்தான் நதியில் இயேசு யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றதே அந்தச் சம்பவம் ஆகும்.

இயேசு ஞானஸ்நானம் பெற்ற பின் தேவனோடு, தனித்திருக்க வனாந்தரத்திற்குச் சென்றார். அந்தக் காலத்தில் அவர் செய்ய வேண்டிய சகல வேலைகளையும் குறித்து தேவனிடமிருந்து கட்டளையைப் பெற்றார்.



இதில் தன்னுடைய அப்போஸ்தலர்களை தேர்வு செய்வதற்கும் ஆலோசனை பெற்றிருக்க வேண்டும். அவர் நாசரேத்திற்குத் திரும்பிப் போகையில், யோவான் ஸ்நானகன் தன்னுடைய பின் அடியார்களுக்குத் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்ககித்துக் கொண்டிருந்தார்.

அப்போது இயேசுவைக் கண்ட யோவான் “இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கக்கூடிய தேவ ஆட்டுக் குட்டி” என்றார். (யோவான் 1:29)

இந்த வார்த்தைகள் அந்திரேயாவின் இருதயத்தை ஊடுருவிப் பாய்ந்தது. அந்த நேரத்தில் இருந்து அவர் யோவானை விட்டு இயேசுவைப் பின் பற்ற ஆரம்பித்தார். ஆகவே இயேசுவைப் பற்றிய சாட்சிகளை எடுத்து உரைப்பதில் இவரே முதல் நபராக இருந்திருக்க வேண்டும். அவர் இயேசுவிடம் பேசினவுடன் சீமோன் பேதுருவிடம் ஓடி இயேசுவைக் குறித்துச் சொன்னார். “சீமோனே நாம் மேசியாவைக் கண்டோம்” என்று அவர் சகோதரனை அழைத்தார். (யோவான் 1:35,40,41)

அதற்குப் பின்பு அந்திரேயா அவருடைய சகோதரன் பேதுருவை இயேசுவுக்கு அறிமுகம் செய்து வைத்தார். இவர்கள் அனைவரும் கானா ஊரில் நடந்த திருமணத்திற்கு அழைக்கப்பட்டார்கள். அங்கு அவர்களுடைய எஜமானின் முதல் அற்புதத்தைக் கண்டார்கள். (யோவான் 2:1-11) அங்கு பாத்திரங்களில் இருந்த தண்ணீரை அவர் ரசமாக மாற்றினார்.

பேதுருவுக்கும் அந்திரேயாவுக்கும் அந்தச் சம்பவம் ஒரு அற்புதமான காட்சியாக இருந்தது. அந்நாள் மட்டும் அவர்கள் தங்கள் தொழிலை விடாதிருந்தார்கள். அந்திரேயாவும், பேதுருவும் இணைந்து தொழில் செய்து வந்தார்கள். அவர்கள் இராமுழுவதும் கடலில் வலைகளை வீசினார்கள். மீன்கள் அகப்படவில்லை இயேசு மீண்டுமாக வலையை வீசச் சொன்னார்.

ஆச்சரிப்படத்தக்கதாக படகு அமிழ்ந்து போகும் வரை மீன்களை வாரினார்கள். இவை அனைத்தையும் கண்ட இருவரும் இவர் தேவனால் அனுப்பப்பட்ட மனிதன் என்று விசுவாசித்தார்கள். (மத்தேயு 4:18-22, லூக்கா 5:1-11)

அந்திரேயா இயேசுவின் அநேக அற்புதங்களையும் உபதேசங்களையும் நேரில் கண்டார். சில அற்புதங்களில் அவர் முக்கியமான பங்கையும் பெற்றார். கலிலேயாக் கடற்கரையில் 5000 பேருக்கு அப்பம் கொடுக்கும் நேரத்தில் அவரும் இருந்தார். ஒரு சிறுவனிடம் 5 அப்பங்களும் இரண்டு மீன்களும் இருப்பதாக இந்த அந்திரேயா இயேசுவிடம் சொன்னார். (யோவான் 6:1-14) கடைசி காலத்தில் எருசலேமின் அழிவைக் குறித்து இயேசு ஒலிவ மலையில் பேசும் போது பேதுரு, யாக்கோபு- யோவானோடுங்கூட அந்திரேயாவும் இருந்தார். (மாற்கு 13:1-4) இயேசுவைக் குறித்து மற்றவர்களிடம் சாட்சி கொடுப்பதற்கு அந்திரேயாவுக்கு ஒரு சிறப்பான வாய்ப்பு கிடைத்தது.



அவருடைய விசுவாசமான ஊழியத்தின் நிமித்தம் அவர் கொடூரமான சிலுவை மரணத்தை அடைந்தார். இந்தச் சுவிசேஷ செய்தியை அப்போஸ்தலனாகிய யோவானோடு சேர்ந்து எபேசு, கிரேக்க பட்டணம், ரஷியா, ஆசியா ஆகிய நாடுகளுக்குச் சுவிசேஷ செய்திகளை கொண்டு சென்றார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளின் நிமித்தம் அவர் கொடுமையான சிலுவை மரணத்தை தண்டனையாகப் பெற்றார் - இதை நாம் வரலாற்றில் காணலாம். ஆட்டுக்குட்டியானவரின் அப்போஸ்தலனாக இருப்பதற்கு ஏற்ற அனுபவங்களைப் பெற்றிருந்தார். அவர் சபையின் விசுவாசமுள்ள அஸ்திபாரமாக இருப்பதற்குக் தகுதி பெற்றவர்.





# பாடம் 3

# அப்போஸ்தலனாகிய பேதுரு

சீமோன் பேதுரு, அந்திரேயாவின் சகோதரன் இருவரும் இணைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். வேதாகமத்தில் அப்போஸ்தலனாகிய பேதுருவைப் பற்றி மட்டுமே அதிகமாக எழுதப்பட்டிருக்கிறது. தேவனுடைய வல்லமையான பரிசுத்த ஆவியின் மூலம் கரடு முரடான குணாதிசயங்களையும், அருமையாக கிறிஸ்துவ குணங்களை உறுதியான பாறையைப் போல் மாற்றி அமைப்பதற்கு பேதுரு ஒரு அருமையான எடுத்துக்காட்டாக இருக்கிறார்.

இவர் அடிக்கடி முந்தி பேசி விட்டு, பிந்தி அதைப் பற்றி யோசிப்பவர். இயேசு அநேக மீன்களைப் பிடிக்கும் படி ஒரு அற்புதம் செய்த போது, பேதுரு, ஆண்டவரே, நான் பாவியான மனுஷன் நீர் என்னைவிட்டுப் போக வேண்டும் என்றார். (லூக்கா 5:1-11) பேதுரு நினைத்ததை உடனடியாகச் சொன்னார். ஆனாலும் அவர் செய்வதெல்லாம் மிகச் சரியானவைகள் என்றே நினைத்தார். இதை அறிந்த இயேசு பேதுருவை நோக்கி அன்பாக பதில் அளித்தார். பயப்படாதே,இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். (மாற்கு 1:29-31). இந்த அற்புதத்தின் நிமித்தம்பேதுருவின் மனைவி இயேசுவுக்கு அதிகமான கனத்தையும், மதிப்பையும் கொடுத்திருக்க வேண்டும். ஆகவே இயேசுவை பின்பற்றக் கூடிய விஷயத்தில் அவள் பேதுருவுக்கு இசைவாக இருந்திருக்க வேண்டும் ஏன் என்றால் எல்லா சுவிசேஷத்திலும் பேதுருவின் இல்லம், சீஷர்களுக்கு ஒரு அருமையான தங்கும் ஸ்தலமாக இருந்தது.





ஆண்டவரோடு பேதுருவுக்கு ஏற்பட்ட அனுபவங்கள், இயேசுவின் சீஷர்களுக்கு அருமையான பாடங்களைக் கற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. (மத்தேயு 14:22,30) இங்கு பேதுரு ஆண்டவர் மேல் வைத்திருக்கும் அன்பையும் விசுவாசத்தையும் எடுத்துக் காட்டுகிறது. இயேசு, பேதுருவைத் தண்ணீர் மேல் நடக்க அழைத்த போது, உடனே அவர் நடந்தார். ஆனால் காற்று பலமாக அடித்ததினால் அவர் மூழ்கத் தொடங்கி, ஆண்டவரை உதவிக்கு அழைத்தார். ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையிலும் ஆழமான பிரச்சனைகள் நம்மை மூழ்கச் செய்யும் போது, நம்முடைய ஆண்டவரை நோக்கிக் கூப்பிடுவதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். (பிலிப்பியர் 4:19)

பேதுருவின் மற்றொரு அனுபவத்தைப் பார்க்கலாம் (மத்தேயு 16:13-16) என்னை யார் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்? என்று இயேசு சீஷர்களிடம் கேட்டார். அனைவரும் மவுனமாக இருந்த போது, பேதுரு சரியான பதிலைக் கூறினார். இதினிமித்தம் இயேசு பேதுருவை அதிகமாக நேசித்தார். அவர் சீமோன் என்ற பெயரை பேதுருவாக

மாற்றினார். பேதுரு என்பதற்கு கல் அல்லது பாறை என்று அர்த்தமாம். இயேசுவின் 12 சீடர்களில் இவருக்கு மட்டுமே பெயர் மாற்றப்பட்டது. ஆகவே இயேசு இதைப் பற்றிச் சொல்லும் போது பேதுருவை நோக்கி.... (இயசே ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்) என்ற இந்தச் சத்தியமாகிய பாறையின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்றார். புறஜாதிகளுக்கும் யூதர்களுக்கும் பேதுரு முதலில் சுவிசேஷத்தை அறிவித்ததாகப் பார்க்கிறோம். (மத்தேயு 16:13-19)



பேதுருவின் வாழ்க்கையில் இருந்து மற்றொரு பாடத்தையும் நாம் கற்றுக் கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறோம். (மத்தேயு 16:21,23) பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு முன்பு தேவனுடைய திட்டங்களை முழுமையாக அறியாத பேதுரு, இயேசு உபத்திரவப்பட்டு மரிக்க வேண்டும் என்பதை அறியாதிருந்தார். ஆகவே இயேசுவுக்குப் பிரச்சனைகள் வரும்போது இவர் நேரடியாகச் சென்று இயேசுவைக் காப்பாற்ற முயற்சி செய்தார். இயேசு அதற்காக, பேதுருவை அதிகமாக கடிந்து கொண்டு புத்தி புகட்டினார் அப்பாலே போ சாத்தானே, என்று சொல்லி, பிதாவின் சித்தத்தை மட்டுமே நாம் நிறைவேற்ற வேண்டும் என்று கற்பித்தார்.

மறுரூப மலையில் பேதுரு, எலியா, மோசே இவர்களுடன் இயேசுவை கண்டார். உடனடியாக ஒவ்வொருவருக்கும் ஒரு கூடாரம் போட வேண்டும் என்றுபேதுரு சொன்னார். தான் நினைப்பதைச் சிந்திக்காமல் பேசிக் கொண்டிருந்தார். பரலோகத்திலிருந்து ஒரு சப்தம் உண்டாகி “இவர் என் நேச குமாரன், இவரில் நான் பிரியமாய் இருக்கிறேன் ” என்று உரைத்தது. பிதாவாகிய தேவன் பேதுருவிடம் பொறுமையோடு இயேசுவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியச் சொன்னார். இங்கு கிறிஸ்தவர்களுக்கு ஒரு முக்கியமான பாடம் கற்றுக்கொடுக்கப்படுகிறது. எந்தக் காரியங்களும் செய்வதற்கு முன்பதாக தேவனிடத்தில் அனுமதி கேட்பது மிக அவசியம். நம்முடைய சுயவிருப்பத்தின்படி காரியங்களைச் செய்தால், அதற்கு தோல்வியே முடிவாகும். (மத்தேயு 17:1-5-9) மாற்கு 9:2-8)

அடுத்ததாகப் பேதுருவின் அனுபவங்களைக் குறித்து நாம் (யோவான் 13-4-10 வசனங்களில் வாசித்து அறியலாம். வீடுகளில் பிரவேசிக்கும்போது மாசுபட்ட கால்களைக் கழுவுவது யூதர்களுக்கு வழக்கமாக இருந்தது.இயேசு சீஷர்களுடைய கால்களைக் கழுவி மனத்தாழ்மையைக் கற்றுக் கொடுக்க விரும்பினார். அப்போது பேதுரு "நீர் என் கால்களைக் கழுவலாகாது" என்றார். அதற்கு இயேசு

"இப்படி நான் செய்யாமல் போனால் என்னிடம் உனக்குப் பங்கில்லை என்று சொன்னார்" உடனே அவர் தன் முடிவை மாற்றிக் கொண்டு "என் தலையையும் கழுவ வேண்டும்" என்று வேண்டினார். அப்பொழுது அவர்" மூழ்கினவன் சுத்தமாக இருக்கிறான். அவன் கால்களைக் கழுவினால் மட்டுமே போதும்" என்றார். ஆவியில் பெலவீனமானவர்கள் ஆண்டவரிடம் அதிகமான இரக்கமும், கிருபையையும் பெறுவார்கள் என்று, பேதுருவின் அனுபவங்கள் மூலமாக நாம் கற்றுக் கொள்ளலாம். கடைசியாக இராபோஜனம் புசித்து முடித்த பின்பு, அனைவரும் கெத்சமனே தோட்டத்திற்குச் சென்றார்கள். அப்பொழுது இயேசு, யாக்கோபு, பேதுரு, யோவானை அழைத்துச் சென்று அவர் தனித்து ஜெபிக்கும் போது அவரோடு விழித்திருக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டார். அவர்கள் மிகவும் களைப்பாக இருந்ததினால் உறங்கி விட்டார்கள்.

இயேசு இதைக்கண்டு "என்னோடு கூட ஒரு மணி நேரம் விழித்திருக்கக்கூடாதா" என்று கேட்டார். இப்படியே மூன்று முறை நடந்தது. கடைசியாக இயேசு, "இனி நித்திரைபண்ணி இளைப்பாருங்கள் இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக் கொடுக்கப்படுகிற வேளை வந்தது. ..... எழுந்திருங்கள், போவோம் என்றார். (மத்தேயு 26:36-45) அடுத்த நாள் மிகவும் கடினமான சூழ்நிலையில் அகப்படப் போகிறார்கள் என்று அவர் அறிந்திருந்தார்.

அடுத்ததாக ஒரு அருமையான குணத்தை பேதுருவிடம் காணலாம்.... (யோவான் 18:8-11) இயேசுவை யூதாஸ்காரியோத் காட்டிக்கொடுத்த போது, அவரைப் பிடிக்க வந்த சேவகர்களின் மத்தியில் இருந்த பிரதான ஆசாரியனின் ஊழியக்காரரின் காதை, தன்னுடைய

பட்டயத்தால் வெட்டினார். இந்தச் சம்பவம் பேதுருவை மிகுந்த தையரியசாலி என்று காட்டுகிறது. ஆனால் தேவனுடைய சித்தத்திற்கு எத்தனை முரண்பாடாக நடந்து கொண்டார் என்றும் தெரிகிறது. இடுக்கமான சூழ்நிலைகளிலும் அன்பை வெளிப்படுத்தி, பகைவர்களையும் நேசிக்க வேண்டும் என்று கற்று கொடுத்தவர், நம்முடைய ஆண்டவராம் இயேசு . அவர் வெட்டப்பட்ட ஊழியக்காரனின் காதைக் குணமாக்கினார்.

(மத்தேயு 26:52) கிறிஸ்தவர்கள் தங்கள் வார்த்தைகளினால் மனிதர்களை வெட்டக்கூடாது. மாறாக சமாதானத்தையும் பொறுமையையும் கடைபிடிக்க வேண்டும். (ரோமர் 12:18) பேதுருவுக்கு இது வேதனையாக இருந்தாலும் சபைக்கும் ஒரு விலையேறப் பெற்ற பாடமாக இருந்தது. (லூக்கா 22:31-34,54:62 மத்தேயு 26:33-35, 57:58,69:75) பேதுரு எவ்வளவு தைரிய சாலியாக இருந்தாலும், தைரியமாக இருக்க வேண்டிய இடத்தில் அவர் கோழையாக மாறிவிட்டார். அவர் இயேசுவை மூன்று முறை மறுதலித்தார்.

ஆனால் அவர் பரிசுத்த ஆவியைப் பெற்ற பின்பு பேதுருவுக்குள் எப்படிப்பட்ட மாற்றங்கள் வந்தது என்று நாம் பார்க்கலாம். இயேசுவின் ஊழியத்தின் போது பேதுரு பெற்ற அனுபவங்களும், பாடுகளும், சில நேர வேதனைகளும் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு அநேக பாடங்களைக் கற்பிக்கிறது. ஆகவே அவருடைய விசுவாசமுள்ள ஓட்டத்திற்கு நாம் பேதுருவுக்கு நன்றி செலுத்தக்கூடியவர்களாக இருக்கிறோம். அவருடைய கடுமையான சோதனைகள் மூலமாக அவருடைய மகா பரிசுத்தமான விசுவாசம் உறுதியாகப் பெலன் அடைந்து சபைக்கு அஸ்திபாரமாக மாறியது.







# பாடம் 4

# கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்குப் பின்பு அப்போஸ்தலனாகிய பேதுரு.

இயேசுவின் மரணத்திற்கு ஐம்பதாவது நாளுக்குப் பின்பு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறும் வரைக்கும் சீடர்கள் புதிய சிருஷ்டியாக மாற வில்லை. அந்நாள் வரைக்கும் தேவனுடைய திட்டங்களை முழுமையாக அறியாதிருந்தார்கள். (1 கொரிந்தியர் 2:9-11) (11 கொரிந்தியர் 5:17)

தேவனுடைய ஞானத்தையும், அறிவையும் பேதுருவும், அப்போஸ்தலர்களும் பெறாததினால் அவர்கள் இயேசுவின் மரணத்தின் நிமித்தமாகச் சோர்வு அடைந்தார்கள். இயேசு மேசியாவாக இருந்தால், இஸ்ரயேலுக்கு அவர் ஏன் விடுதலை தரவில்லை - ரோமர்களை ஏன் அவர் அழிக்க வில்லை? எபிரேய தலைவர்களையும், ரோம அதிகாரிகளையும் அவர் ஏன் மதித்து நடந்தார்?



இயேசு நித்தியமாக போய்விட்டாரா? என்ற அநேக கேள்விகள் அவர்களை குழப்பத்திற்குள்ளாக்கியது. ஆகவே, உயிர்த்தெழுந்த இயேசு அவருக்கு அநேக முறை தரிசனமாகி விசுவாசத்திற்குரிய காரியங்களைச் சொல்லி பெலப்படுத்தினார்.

எம்மா ஊருக்குப் பிரயாணம் செய்த பேதுருவும், கிலெயோப்பாவும் வழியில் ஒரு வழிப் போக்கரைக் கண்டு தங்களோடு பிரயாணத்தில் அவரையும் சேர்த்துக்கொண்டு இயேசுவின் மரணத்தைக் குறித்து அவர்கள் சம்பாஷித்துக் கொண்டே போனார்கள். அந்த வழிப் போக்கர் உயிர்த்தெழுந்த இயேசுவாக இருந்ததால் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட வசனங்களை விளக்கிக் கொண்டே அவர்களோடு நடந்து சென்றார். தீர்க்கதரிசனம் நிறைவேறினதை எடுத்துக் காட்டினார். அந்த வழிப்போக்கரின் ஞானத்தைக் கண்டு அவர்கள் வியப்பு அடைந்தார்கள். அதற்கு பின்பு, அவர்கள் அவரை இரவு நேர போஜனத்திற்கு அழைத்தார்கள். அவர் அப்பத்தைப்பிட்டு ஆசீர்வதித்தபோது, அவரை உயிர்த்தெழுந்த இயேசு என்று அறிந்து கொண்டார்கள். (லூக்கா 24:13-35)

உயிர்த்தெழுந்த ஆண்டவரின் சாட்சிகளைக் கேட்ட பேதுரு, மிகவும் ஆச்சரியம் அடைந்தார். சீஷர்களை ஊக்குவிப்பதற்கு இன்னும் அதிகமான காரியங்கள் தேவைப்பட்டது. சோர்ந்து போன பேதுரு, மீண்டும் மீன் பிடிக்கப் போய் விட்டார். இன்னும் அநேக சீடர்களும் பின்னிட்டுப் போனார்கள். அவர்கள் இன்னும் பரிசுத்த ஆவியை பெறாததினால் அவர்களுடைய ஆவிக்குரிய அழைப்பையும், பொறுப்பையும் உணராதிருந்தார்கள். இவை எல்லாவற்றையும் விட்டு விட்டு, எஜமானனுக்கு ஊழியம் செய்யவேண்டும் என்ற உணர்வை அவர்கள் பெறவில்லை. ஆனால் இயேசு பேதுருவிடம் என்னை நேசிக்கிறாயா, என் ஆடுகளை மேய்ப்பாயா என்று மூன்று முறை கேட்டார் அவர் தன்னை மூன்று முறை மறுதலித்ததினால் இப்படிக் கேட்டார். என்று அறிந்து பேதுரு மனம் கசந்து அழுதார். (யோவான் 21:3-17)



அடுத்ததாக, அவர்கள் பெந்தேகோஸ்தே நாளுக்குத் தங்களை ஆயத்தம் செய்த போது உயிர்த்தெழுந்த இயேசு காட்சி அளித்தார். எல்லா அப்போஸ் தலர்களும், சீஷர்களும் ஓர் இடத்தில் கூடி இருக்கையில் தேவன் அவர்களுடைய இருதயத்தைப் பரிசுத்த ஆவியால் நிரப்பி அநேக வரங்களையும், ஆவிக்குரிய

அறிவையும் கொடுத்தார். அந்நிய பாஷையில் பேசுவதே அக்காலத்தில் முக்கியமான வரமாக இருந்தது. இந்த வரத்தைப் பெற்றவர்கள் இயேசுவின் சுவிசேஷத்தை மிகத் தெளிவாக மற்ற அந்நிய மொழிகளில் அவரவர்களுக்குத் தெளிவாகப் புரியும் படி எடுத்துரைத்தார்கள். (அப்போஸ்தலர் 2:1-8,11) பேதுரு இந்த ஆவியைப் பெற்ற பின்பு அவர் பழைய பேதுருவாக இல்லாமல் கிறிஸ்துவுக்குள் புதுச் சிருஷ்டியாக வளர்ந்தார். குணங்களில் அவர் இயேசுவைப் போல் வளர ஆரம்பித்தார்.

இப்படி, தேவனிடத்திலிருந்து பரிசுத்த ஆவியைப் பெற்ற பேதுரு சுவிசேஷத்தை, யூதர்களுக்கு பிரசங்கித்தார். சத்தியம், வல்லமை, அன்பு, நீதி இவைகளை ஆதாரமாகக் கொண்டு அவர் பிரசங்கித்தார். (அப்போஸ்தலர் 2:14,37,38,41) இவர்கள் பெற்ற பரிசுத்த ஆவியினால் பலவிதமான மொழிகளைப் பேசக்கூடிய வரங்களைப் பெற்றார்கள். வியாதியஸ்தர்களையும் சொஸ்தமாக்கினார்கள். பேதுரு முடவனான ஒருவரையும் இன்னும் அநேகரையும் குணப்படுத்தினார். இதன் மூலமாக தேவனுடைய அன்பையும், சத்தியத்தையும் அநேக யூதர்கள் புரிந்து கொண்டார்கள். (அப்போஸ்தலர் 3:1-10)



பேதுரு தேவ ஆவியைப் பெற்றதினாலே சிறையிலும் சுவிசேஷத்தைக் குறித்துப் பயமில்லாமல் தைரியமாகப் பிரசங்கித்தார். ஆண்டவரை மறுதலித்த பேதுரு முற்றிலுமாக மாறிவிட்டார். (அப்போஸ்தலர் 4:1-21) நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று பேதுரு இயேசுவை நோக்கி சொன்னதால் இயேசு பேதுருவை மிகவும் நேசித்தார். (மத்தேயு 16:17-19) தேவனை அறிந்த யூதர்களுக்கு மட்டும் சத்தியத்தை போதிக்காமல் சத்தியத்தைப் அறியாத புறஜாதிகளுக்கும் சத்தியத்தைப் போதித்தார். அப்போஸ்தலர் 10ம் அதிகாரத்தில் பேதுருவின்

மூலம் புறஜாதிகளின் மனம் திரும்புதலை குறித்து மிக அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (கொர்நேலியு)

சிறு மந்தைக்குப் பேதுருவின் விசுவாசம், ஒரு திருஷ்டாந்தரமாக இருந்தது. (அப்போஸ்தலர் 12:1-11) இந்த வசனங்களில் பேதுருவை மரணத்திற்கு நியமித்து சிறையில் அடைத்ததையும். அவர் பணி இன்னும் நிறைவு அடையாததினால் அவரை தூதர்கள் காப்பாற்றியதும் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவர்கள் சில நேரங்களில் இக்கட்டான சோதனைகளில் இருந்து தப்புவிக்கப்படுகிறார்கள். ஆனால் சில நேரங்களில் தேவன் சோதனைகளை அனுமதித்துவிடுகிறார். அனைத்தையும் நமக்கு தேவன் நன்மையாக முடித்து விடுகிறார். இவைகள் மூலமாக நாம் அநேக அனுபவங்களையும் விசுவாசத்தையும் கற்றுக் கொள்ளலாம். (ரோமர் 8:28)

பரிசுத்த ஆவியின் மூலமாகப் பேதுருவுக்குள் மாற்றங்கள் ஏற்பட்டாலும், சில சந்தர்ப்பத்தில் பழைய மனிதன், தேவனுடைய காரியங்களுக்கு இடையூராகக் கிரியை செய்து வந்தான். சில யூத சட்டங்களுக்கு பேதுருவும் இசைந்து போசினார். ஆனால் பவுல், இதை வன்மையாகக் கண்டித்தார். பேதுரு தன்னுடைய தவறுகளில் இருந்து திருந்தி வாழ ஆரம்பித்தார். (கலாத்தியர் 2:7-14) ஒரு கிறிஸ்தவன் சத்தியத்தைக் கேட்ட பின்பு மாறுவதற்கு மேட்டிமையான எண்ணத்தைக் கொண்டிராமல் தாழ்மையையும், கீழ்ப்படிதலையும் உடையவர்களாக இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு முன்பும்,பெற்ற பின்பும் பேதுரு நமக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறார். அவர் எழுதின இரண்டு நிருபங்களிலும் அவர் பட்ட அனுவங்களையும், விசுவாசத்தையும் குறித்து மிக அருமையாக எழுதியிருக்கிறார். மாற்கு சுவிசேஷத்தையும் இந்த பேதுரு மாற்கின் உதவியோடு எழுதினார் என்று கருதப்படுகிறது.

இப்படியாகச் சபைக்கு உறுதியான அஸ்திபாரமாக பேதுரு இருந்தார். அவருடைய மரணத்தை குறித்து நாம் பார்க்கும் போது, அவர் தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டார் என்று வரலாற்றில் காணலாம். நேராக சிலுவையில் அறைந்தால் இயேசுவுக்கு சமமாகி விடும் என்று சொல்லி தலைகீழாகச் அறையப்பட்டார் என்று சொல்லப்படுகிறது. அநேக தவறுகளை அநேக முறைகள் செய்திருந்தாலும். அவர் ஆண்டவரை மிகவும் நேசித்ததால் ஒரு அற்புதமான கிறிஸ்துவின் மாதிரியாக மாறினார். நாம் பேதுருவின் வாழ்க்கையில் கற்றுக் கொள்ளக் கூடியவைகள் அநேகம். கிறிஸ்தவ வாழ்க்கையில் வேகமாக வளர்ச்சிஅடைந்தவர். முடிவு பரியந்தம் விசுவாசத்தைக் காத்துக் கொண்டு மரித்தவர். (வெளி 2:10,1 தெசலோனிக்கேயர் 1:6)







## பாடம் 5

# அப்போஸ்தலனாகிய பிலிப்பும் நாத்தானியேலும்

பெத்சாயிதாவில் இருந்து வந்த பிலிப்பு, அந்திரேயாவின் நண்பனாக இருந்தார். இருவருமே யோவான் ஸ்நானகனின் சீடர்களாக இருந்தார்கள். அந்திரேயாவைப் போல, பிலிப்பு இயேசுவை தன்னுடைய இருதயத்தில் ஏற்றுக்கொள்ளுவதற்கு ஆயத்தமாக இருந்தார். அந்திரேயாவும், பேதுருவும் இயேசுவைத் தேடி வந்தார்கள். ஆனால் பிலிப்புவை இயேசு தேடிச் சென்றார். பிலிப்பு இயேசுவைக் கண்ட உடனே இவரே மேசியா என்று உணர்ந்தார். அவர் இயேசுவின் சீஷனாக மாறுவதற்கு மிகவும் சந்தோஷம் அடைந்தார்.

ஆழமான சந்தோஷத்தில் ஆழ்ந்த பிலிப்பு தன்னுடைய சிநேகிதனாகிய நாத்தானியேலைக் கண்டார். (நாத்தானியேல் பர்த்தெலேமேயு என்றும் அழைக்கப்பட்டார்.) பிலிப்பும், நாத்தானியேலும் தேவனைச் சேவிப்பதில் ஒரே நோக்கத்தோடு இருந்தார்கள். பிலிப்பு நாத்தானியேலிடம் வருவதற்கு முன்பு நாத்தானியேல் அத்திமரத்தின் கீழ் தேவனுடைய வழிநடத்துதலுக்காகவும், ஞானத்திற்காகவும் தேவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார். இவரும் யோவானுடைய சீஷனாக இருந்தார். இவர் ஆழமான விசுவாசமுள்ளவர் என்று பிலிப்பு அறிந்து மோசேயின் சட்டத்திலும், தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்ட மேசியா நாசரேத் ஊரைச் சேர்ந்த யோசேப்பின் குமாரன் என்றும் அறிவித்தார். இதைக் குறித்து அவர் மகிழ்ச்சி அடைவார் என்று எதிர்பார்த்தார். ஆனால் நாத்தானியேல் மிகவும் ஞானமுள்ளவராக இருந்ததினால் சோதிக்காமல் இயேசுவை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்.ஆகவே நாசரேத்திலிருந்து

ஒரு நன்மையும் பிறக்கக்கூடுமோ? என்று கேட்டார். இந்நாள் வரைக்கும் நாசரேத்தைக் குறித்து யாரும் எந்த நன்மையான காரியத்தையும் சொல்லவில்லையே என்றார். அதற்கும் மேலாக அந்தப் பட்டணம் மிகுந்த கீழ்த்தரமாக இருந்தது, இதிலிருந்து பரிசுத்தமான நல்லவைகள் எப்படி வரும் என்றார்? ஆனால் பிலிப்பு வந்து பார், என்றார்.

இப்படிப்பட்ட கேள்விகளை எழுப்பினதின் மூலம், எந்த விதத்திலும் ஏமாற்றுக்காரரால் அவர் ஏமாந்து போவதற்கு வாய்ப்பு இல்லை என்று தெரிகிறது. இயேசு நாத்தானியேலைக் கண்டவுடன், அவரிடம் எந்த விதமான கபடமும் இல்லாததினால் இதோ கபடற்ற உத்தம இஸ்ரயேலன் என்றார். எப்படிப்பட்ட அற்புதமான வாக்கியம் பாருங்கள். ஆனால் இன்னும் அவர் இயேசுவை மேசியா என்று விசுவாசிக்கவில்லை. நாம் அறிமுகம் ஆகாததற்கு முனனே என்னைக் குறித்து எப்படித் தெரியும் என்று கேள்வி எழுப்பினார். இயேசு மெதுவாகவும் அன்பாகவும் பிரதியுத்தரம் அளித்தார். பிலிப்பு உன்னை அழைக்கும் முன்பே நீர் அந்த அத்திமரத்தின் கீழ் இருந்ததை நான் கண்டேன் என்றார். நாத்தானியேலின் இருதயம் ஆச்சரியத்தால் துள்ளி எழும்பிற்று. நான் ரகசியமாக தேவனிடத்தில் ஜெபிப்பதை இவர் எப்படி அறிந்தார் என்று யோசித்து, இவரே மேசியா என்பதை உணர்ந்து, ரபீ என்று கூப்பிட்டு நீரே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனும், இஸ்ரயேலுக்கு ராஜாவுமானவர் என்று அறிக்கையிட்டார். அவர் இயேசுவே ராஜா என்ற விசுவாசத்தோடு அறிக்கையிட்டார். விசுவாசத்தின் மூலம் காண்பவர்கள் இன்னும் அதிகமான அற்புதங்களைக் காண்பார்கள் என்று இயேசு சொன்னார். (யோவான் 1:45-51)

இப்படி ஒரு அற்புதத்தைத்தான் பிலிப்பும் நாத்தானும் கண்டார்கள் (அநேகரை சில அப்பங்களையும், மீன்களையும் கொண்டு போஷித்தார்). இயேசு பிலிப்புவிடம் இந்த ஜனங்களுக்கு அப்பங்களை வாங்கும்படி சொன்னார். பிலிப்பு உலகத்தின் சிந்தனையில் இருந்தார் என்பதை இயேசு அறிந்து இப்படிச் சொன்னார். விசுவாசத்தினால் சகலமும் கூடும் என்று பிலிப்புவுக்கு உணர்த்தும்படி இதைச் சொன்னார்.

பிலிப்பு அதற்கு, இவர்களுக்கு அப்பம் வாங்குவதற்கு 200 பணம் செலவாகுமே என்றார். (ஒரு வருட கூலி) அந்திரேயா அங்கு ஒரு கூடையில் இருந்த அப்பங்களையும், மீன்களையும் காண்பித்தார் ஆனால் இது ஜனங்களுக்குப் போதாது என்று தீவிரமாகச் சொன்னார். கானா ஊரில் திருமணத்தின் போது செய்த அற்புதத்தை அவர்கள் நினைவு கூர்ந்திருக்கலாம். ஆனால் அவர்கள் அதைப் பற்றி அங்கு யோசிக்க வில்லை. ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தை, இயேசு சாதகமாக்கிக் கொண்டு தேவனுடைய கிருபையையும், இரக்கத்தையும் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். தேவன் நம்முடைய சகல தேவைகளையும் பூர்த்தி செய்வார் என்று நிரூபித்தார். (பிலிப்பியர் 4:19, யோவான் 6:5-12)

அப்போஸ்தலனாகிய பிலிப்புவைப் பற்றியும், நாத்தானியேலைப் பற்றியும் வேறு எங்கும் வேதத்தில் குறிப்பிடவில்லை. பெந்தேகோஸ்தே என்னும் நாளில் இவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டதைப் பற்றி எழுதியிருக்கிறது. வரலாற்றில் பிலிப்பு ஆசியாவின் ஒரு பகுதியில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததாகவும், மற்ற மதங்களை அவர் எதிர்த்ததால் கொல்லப்பட்டார் என்றும் எழுதியிருக்கிறது. அப்போஸ்தலர் 6,8ம் அதிகாரத்தில் பிலிப்பைப் பற்றிய சில காரியங்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவர்களைப் பற்றி அதிகமாக எழுதப்படாமல் இருந்தாலும் இவர்கள் சத்தியத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் விசுவாசமுள்ளவர்களாக இருந்தார்கள். இவர்கள் வாழ்ந்த வாழ்க்கை, சபைக்கு உறுதியான அஸ்திபாரமாக இருந்தது.





## பாடம் 6

## அப்போஸ்தலனாகிய யாக்கோபு



செபெதெயுவுக்கு யோவான், யாக்கோபு என்னும் இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். இவர்கள் சீமோன் பேதுருவோடும்.அவர் சகோதரர் அந்திரேயாவோடும் இணைந்து மீன் பிடிக்கும் தொழிலைச் செய்து வந்தார்கள். இவர்கள் அனைவரும் செபெதேயுவுக்கு வேலை செய்திருக்க வேண்டும். ஒரு நாள் இவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது,ஒரு அற்புதத்தை அங்கு இயேசு நிகழ்த்தினார். (வலை கிழியத் தக்க மீன்களைப் படகில் நிரப்பினார்கள்) அதற்கு பின்பு இயேசு அவர்களை நோக்கி, என்னைப் பின் பற்றுங்கள் நான் உங்களை மனிதர்களைப் பிடிப்பவர்களாக மாற்றுவேன் என்றார். சிறிது தூரம் நடந்து சென்ற பின்பு, அவர் யோவானையும், யாக்கோபையும் அவர்களுடைய மீன் பிடிக்கும் தொழிலை விட்டு வரும்படி சொன்னார் படகுநிறைய மீன்கள் பிடித்ததை இவர்களும் கண்டிருக்க வேண்டும். அற்புதங்களைக் கண்ட அவர்கள் இயேசு அழைத்த போது உடனே அவருக்குப் பின் சென்றார்கள். (மத்தேயு 4:18-22, லூக்கா 5:2-11, மாற்கு 1:19-20)

யோவான் யாக்கோபை விட இளையவராக இருந்தார். ஆனால் இருவரும் ஒரே கனத்தை உடையவர்களாக இருந்தார்கள். இருவரும்

இயேசுவை விசுவாசத்தோடு பின்பற்றினார்கள். அவர்கள் ஆண்டவர் மேல் வைத்த பக்தி வைராக்கியத்தின் நிமித்தம் இவர்கள் இடி முழக்க சகோதரர் என்று அழைக்கப்பட்டார்கள். ஒருநாள் இயேசுவும் அப்போஸ்தலர்களும் சமாரியா பட்டணத்திற்குள் பிரவேசித்த போது இயேசு யாக்கோபையும், யோவானையும், உணவு வாங்கும்படி அனுப்பினார். இந்த பெரிய போதகர், எங்களுடைய வியாதிகளை சொஸ்தப்படுத்துவாரா? அல்லது யூதர்கள் எங்களை நடத்துவது போல எங்களை நடத்துவாரா என்று, இவர்களிடம் சமாரியா பட்டணத்து மக்கள் கேட்டார்கள்.அவர் இஸ்ரயேல் ஜாதிக்காக மட்டுமே அனுப்பப்பட்டவர் என்று யாக்கோபும் யோவானும் பதில் அளித்தார்கள். நீங்கள் யூதர்களிடம் போய் போஜனத்தை வாங்கிக்கொள்ளுங்கள் என்று, இருவரையும் அனுப்பிவிட்டார்கள். உடனடியாக அவர்கள் இயேசுவிடம் வந்து அந்தப் பட்டணத்தை அக்கினியால் அழிக்கும்படி உத்தரவு கேட்டுக்கொண்டார்கள். இயேசு அவர்களைக் கடிந்துகொண்டு புத்தி சொன்னார். இன்றைய கிறிஸ்தவர்களுக்கும் ஒரு அருமையான பாடம் அமைந்துள்ளது. நாம் சொல்லும் சத்தியத்தை ஏற்றுக் கொள்ள மக்கள் மறுக்கும் போது அமைதலோடு அன்பாக நாம் அவர்களுக்கு மறு உத்தரவு கொடுக்க வேண்டும். (லூக்கா 9:51-56)

யோவான், யாக்கோபின் தாயாகிய சலோமி இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தவராக அவருடைய ராஜ்யத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இவள் இயேசுவின் சித்தியாக இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இயேசுவிடம் அவள் வந்து தன்னுடைய குமாரர் இருவரையும் உம்முடைய இருபக்கத்திலும் அமரும்படி நீர் கிருபை செய்யும் என்று கேட்டுக் கொண்டாள். இது அநேகருக்கு அவள் மேட்டிமையான சிந்தையில் இந்தக் காரியத்தை கேட்டாள் என்று நினைக்கலாம். அவள் இயேசுவின் சித்தியாக இருந்ததினால் இயேசுவை சிறு வயதில் வளர்த்திருக்க அநேக வாய்ப்புகள் இருக்கிறது. அவளுடைய பிள்ளைகள் இயேசுவின் மேல் அதிகமான அன்பை வைத்திருந்ததினால் நித்தியமாக இயேசுவோடு இருந்து அவருக்கு உதவி செய்ய வேண்டும், என்று விரும்பி அவள் இப்படிப்பட்ட ஒரு காரியத்தை இயேசுவிடம்

கேட்டாள். இவர்கள் இருவரும் செய்த தவறை இயேசு சுட்டிக்காட்டியிருக்கலாம். ஆனால் அவர் செய்யாமல், நீங்கள்கேட்பது என்ன என்று உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டார்? பலியின் ஜீவியத்தில் வாழ்க்கையை முழுமையாக ஒப்புக்கொடுத்து வாழ வேண்டும் என்ற கூறினார்,அதற்கு நாங்கள் அப்படியே செய்வோம் என்று பதில் அளித்தார்கள். (மத்தேயு 20:20-23)





யாக்கோபு இயேசுவுக்கு மிக நெருங்கிய தோழராக இருந்திருக்க வேண்டும். அவரோடு கூடஇருந்த பேதுரு யோவானுடன் இவரும் ஒருவராக இருந்தார். அதற்காக இயேசு பட்சபாதமாக இருந்தார் என்று நாம் சொல்ல முடியாது, மாறாக தன் மேல் வாஞ்சையாகவும், வைராக்கியமாகவும் இருக்கும் ஒவ்வொருவர் மேலும் அவர் அக்கரையுள்ளவராக இருக்கிறார். இப்படிப்பட்டவர்களே ஆவிக்குரிய வாழ்க்கையில் உற்சாகப்படுத்தப்படுகிறார்கள்.

ஒரு சமயம் பேதுருவும், யாக்கோபும், யோவானும் மரித்துப்போன ஒரு சிறுமியை இயேசு உயிரோடு எழுப்பினதைக் கண்டார்கள். அந்த சம்பவம் நடந்தபோது இவர்கள் மூவரும் மட்டுமே அங்கு இருந்ததாக சொல்லப்படுகிறது. மரித்துப் போனதினால் வெளுத்திருந்த அந்தச் சிறுமி ஜீவனோடு மீண்டும் எழும்பினது எத்தனை ஆச்சரியமான அனுபவமாக இருந்திருக்க வேண்டும்.

இதைக் கண்ட அப்போஸ்தலர்கள், நிச்சயமாக மரித்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றிப் புரிந்திருப்பார்கள். (மாற்கு 5:21-24,35:43)

இவர்கள் மூவரும் மறுரூப மலையில் அந்தக் காட்சியை கண்டார்கள். இது ஒரு பயங்கரமான அனுபவமாக இருந்தாலும் அவர்கள் அதைப் புரிந்துகொள்வதற்கு முதலில் சிரமப்பட்டார்கள். ஆனால் அதற்கு பின்பு, தேவனுடைய வல்லமை நிறைந்த மகிமையான ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்பதைச் சபைக்கு அறிவித்தார்கள். (11 பேதுரு 1:16, மத்தேயு17:19)

மரித்துப் போன சிறுமியை எழுப்பின போது யாக்கோபு இயேசுவின் வல்லமையை மட்டும் உணராமல், இந்த அற்புதமான ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு, அவர் செலுத்த வேண்டிய பாடுகளையும் அனுபவிக்க வேண்டிய உபத்திரவங்களையும் அறிந்து கொண்டார். அவர் மரணத்திற்கு முன்பு துக்கமான அந்த இரவில் அவரோடு கூட விழித்து இருக்கும்படி சொன்னார். ஆனாலும் அவர்கள் தூங்கிவிட்டார்கள். அந்தச் சூழ்நிலையில் அவர் ஜெபித்து தேவனுடைய ஆதரவையும், ஆறுதலையும் பெற்றார். அந்த நேரத்தில் அவர்கள் விழித்திராததினால், அடுத்தநாள் இயேசு பிடிப்பட்ட போது அவர்கள் குழப்பம் அடைந்து பயந்து விட்டார்கள். நாம் நம்முடைய இக்கட்டான நேரங்களில் மாம்ச பெலவீனங்களில் தேவனுடைய ஐக்கியத்தை விட்டு விட்டால் நாமும் குழப்பம் அடைந்து அநேக தவறுகளைச் செய்ய வாய்ப்புகள் ஏற்படும். ஆனால் பெந்தகோஸ்தே நாளில் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்ற பின்பு அனைத்து காரியங்களையும் புரிந்து கொண்டார்கள். ஆனால் அந்த வேளையில் இயேசுவோடு விழித்திருக்க வில்லையே என்று எவ்வளவு வேதனைப்பட்டிருப்பார்கள். (மாற்கு 14:32-42)

யாக்கோபு வாழ்நாள் முழுவதும் விசுவாசமுள்ளவராக இருந்து கொண்டு சென்ற இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். இவர் இயேசுவைப் பற்றி அற்புதமான சாட்சி கொடுத்ததினால் அகரிப்பா ராஜா யூதர்களைப் பிரியப்படுத்துவதற்கு அவரை முதலில் கொலை செய்தார். இயேசு மரித்து 12 வருடங்களுக்குப் பின் இவர் கொலை செய்யப்பட்டார். எஜமான் பானம் செய்த பாத்திரத்தில் தானும் பானம் பண்ணினார். இவர் தன்னுடைய சொல்லினாலும், செயலினாலும் அன்றைக்கும், இன்றைக்கும் சபைக்கு உறுதியான அஸ்திபாரமாக இருக்கிறார். (அப்போஸ்தலர் 12:1-3)





# பாடம் 7

# அப்போஸ்தலனாகிய யோவான்

இவர் யாக்கோபின் இளைய சகோதரனாக இருந்தார். இயேசுவின் அப்போஸ்தலர்களில் இவர் மிகவும் வயதில் சிறியவர். இவர் மனத் தாழ்மையுள்ளவர், இவருடைய சுவிசேஷத்தில் தன்னைக் குறித்து எழுதும் போது இயேசுவுக்கு அன்பான சீஷன் என்று குறிப்பிடுவார். நான் இதைச் செய்தேன், நான் அதைச் செய்தேன் என்றும் நான் தான் இயேசுவுக்கு மிகவும் பிடித்தவன் என்றும் சொல்லுவதற்கு அவர் துணியவில்லை. ஆகவே அவருடைய சுவிசேஷத்தில் இயேசுவின் அன்பை மட்டும் அவர் பிரதிபலித்தார். (யோவான் 13:23,19:26, 20:2,21:7,20)

இவரைப் பற்றியும் இவர் தாயைக் குறித்தும் சில காரியங்களை நாம் முந்திய பாடத்தில் பார்த்தோம். இவருடைய தாயாகிய சலோமி இயேசுவின் தாய் மரியாளுக்குச் சகோதரியாக இருந்தாள், ஆகவே, யோவானும் யாக்கோபும் இயேசுவுக்கு ஒன்று விட்ட சகோதரர்களாய் இருந்தார்கள். அதுமட்டுமல்லாமல் இவர்கள் செபெதேயு என்னும் நாமம் கொண்ட மீன் பிடிப்பவருக்கு பிள்ளைகளாக இருந்தார்கள். இவர்களுடைய குடும்பம் அக்காலத்தில் மிக வசதியாக இருந்தது.



இயேசு ஞானஸ்நானம் பெற்று 40 நாள் வனாந்தரத்தில் இருந்தார் . பின்பு தனித்து நடந்து வரும் போது யோவான் ஸ்நானகன் போதித்துக் கொண்டிருந்தார். இயேசுவைக் கண்டு இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி என்றார்.

செபேதேயுவின் குமாரனாகிய யோவானும் யோவான் ஸ்நானகனின் சீஷனாகிய அந்திரேயாவும் உடனே இயேசுவுக்குப் பின் சென்றார்கள்.

இயேசு அவர்களிடம் திரும்பி என்ன தேடுகிறீர்கள்? என்றுகேட்டார். அதற்கு போதகரே நீர் எங்கு தங்கியிருக்கிறீர் என்று கேட்டார்கள். (யோவான் 1:36-39) இயேசு அவர்களை அழைத்துச் சென்று அநேக காரியங்களைக் கற்றுக் கொடுத்தார். இயேசுவின் வாழ்க்கையில் இவர்களை சீஷர்களாகக் கண்டடைந்தது அவருக்கு மிகவும் உபயோகமுள்ளதாக இருந்தது. யோவானும், யாக்கோபும் தேவனுக்கு பிரியமான ஊழியக்காரராக இருந்த போதிலும் சமாரியாப் பட்டணத்தில் நடந்த ஒரு சம்பவத்தின் நிமித்தமாக இவர்கள் இடிமுழக்கத்தின் சகோதரர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். (மாற் 3:17, லூக்கா 9:54,55) பேதுரு, யாக்கோபு இவர்களைப் போல் யோவானும், இயேசுவோடு நெருங்கி வாழ்ந்தார். ஆகவே இவர்கள் இயேசுவின் நண்பர்களானார்கள். சமாரியா பட்டணத்தில் நடந்த சம்பவத்தை அடுத்து யோவானைக் குறித்தும், அவருடைய ஸ்திரமான எண்ணங்களைக் குறித்தும் (மாற்கு 9:38-40) இந்த வசனங்களில் உறுதிப்படுத்துகிறார். இயேசுவை அறியாதவர்கள் அவருடைய நாமத்தில் பிசாசுகளைத் துரத்தும் போது, யோவான் நேரடியாக இயேசுவிடம் தைரியமாகப் பேசினார். போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உம்முடைய பேரினால் பிசாசுகளைத் துரத்தினான், அவனைத் தடுத்தோம் என்றார். அதற்கு இயேசு - அவனைத் தடுக்கவேண்டாம். என் நாமத்தினாலே அற்புதம் செய்கிறவன் எளிதாய் என்னைக்குறித்துத் தீங்கு சொல்லமாட்டான். ... என்று சில காரியங்களைச் சொல்லி அறியாதவர்கள் மேலும், நாம்அன்பு செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை இயேசு இங்கு வலியுறுத்தினார். யோவான் வெகு சீக்கிரத்தில் இந்த பாடத்தைக் கற்றுக் கொண்டார். இயேசுவை மிகவும் நேசித்ததால் உடனே அவருக்குக் கீழ்ப்படிந்தார். நாம் முந்தி, பார்த்த பாடங்களில் சொல்லப்பட்டது போல அநேக சம்பவங்களில் இவர்கள் மூன்று பேர் மட்டுமே இயேசுவோடு தனித்திருந்தவர்கள். இயேசு அந்த சிறுமியை உயிர்ப்பிக்கும் போதும். மறுபமலையில் காட்சி அளிக்கும் போதும், கெத்சமனே தோட்டத்தில் அவர் ஆழ்ந்த துக்கத்தில் இருந்த போதும் இந்த மூன்று சீஷர்களும் அவரோடு இருந்தார்கள்.

இயேசுவுக்கு மிக நெருங்கிய நண்பர்களாக இவர்கள் இருந்தார்கள் என்பதற்கு, மற்றொரு காரியத்தையும் பார்க்கலாம். இயேசுவின் இராபோஜனத்தை ஆயத்தம் செய்வதற்கு அவர்கள் இருவர் மட்டுமே அனுப்பப்பட்டார்கள்.அதில் ஒரு அற்புதத்தையும் அவர்கள் நேரடியாகக் கண்டார்கள். (லூக்கா 22:8-13) ஒரு மனுஷன் பானையைத் தலையில் வைத்துக் கொண்டு போகிறதைக் காண்பீர்கள். அவருக்கு பின்னால் நீங்கள் போய் அவர் காட்டும் இடத்தில் இராபோஜனத்திற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யுங்கள் என்றார். இயல்பாக பெண்கள் மட்டுமே பானைகளைத் தலையில் கொண்டு செல்லுவது வழக்கம். ஆனால் ஒரு மனுஷன் இப்படி வருவான் என்று முன்பே அறிந்திருந்தார்.

யோவான் இயேசுவுக்கு நெருங்கிய சிநேகிதனாக இருந்தாலும், மற்ற சீஷர்களுக்கு இருந்த குழப்பங்களும் பயங்களும் அவருக்குள்ளும் இருந்தது. கெத்சமனே தோட்டத்தில் இயேசு மத போதகர்களின் தலைவர்களால் பிடிபடும் போது அவர் அங்கு இருந்து ஓடி விட்டார். (மத்தேயு 26:56) எல்லா அப்போஸ்தலர்களும் அவரை விட்டு ஓடினார்கள். சீஷர்களுடைய இயலாமையினால் எல்லா இக்கட்டான சூழ்நிலைகளிலும் இயேசு தன்னைக் காப்பாற்றிக் கொண்டார். ஆனால் இப்பொழுது அவர் மத போதகர்களின் தலைவர்களிடம் அகப்படும் போது என்ன செய்ய வேண்டும் என்று சீடர்களுக்கே தெரியவில்லை. அநேக முறைகள் இயேசு இந்த நேரத்தைப் பற்றிஅவைகளின் தீர்க்கதரிசனங்களைப் பற்றியும் சொல்லியும் அவர்கள் அந்தக் காரியங்களை புரிந்துக்கொள்ளவில்லை. (யோவான் 16:32,33, மத்தேயு 26:37-41) ஆனால் யோவான் துணிந்து செயல்பட ஆரம்பித்தார். யோவான் மதத்தலைவர்களோடு உறவு வைத்துக்கொண்டு பிரதான ஆசாரியனுடைய அரண்மனைக்குள் செல்ல அனுமதி பெற்றார். யோவானும் பேதுருவும் அங்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். ( யோவான் 18:13-15)

அங்கு பேதுரு இயேசுவை மூன்று முறை மறுதலித்தார். (யோவான் 18:17,25,26,27) யோவானுடைய இருதயம் இயேசுவுக்காக எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும். இயேசு சிலுவையைச் சுமந்து கொண்டு



போவதை அவர் தூரத்திலிருந்து கண்டிருக்க வேண்டும். ஒன்றும் செய்ய இயலாதவராக இயேசுவின் சிலுவையின் கீழ் நின்ற யோவானின் மனநிலையை சற்று கற்பனை செய்து பாருங்கள். அப்போது இயேசு அவரை நோக்கி அதோ உன் தாய் என்றும் அவர் தன் தாயாகிய மரியாளை நோக்கி அதோ உன் மகன் என்றும் சொன்னார் (யோவான் 19:25-27)

இயேசு யோவான் மேல் ஆழமான விசுவாசம் வைத்ததினால் தன்னுடைய தாயை அவரிடம் ஒப்படைத்தார். அதுமட்டும் அல்ல யோவான் மரியாளை மிகவும் நேசித்து அக்கறையோடு கவனிப்பதை (யோவானுக்கு மரியாள் பெரியம்மா முறை) இயேசு பல முறைகள் கவனித்திருக்க வேண்டும். ஆகவே முடிவு பரியந்தம் தன்னுடைய தாயை யோவான் கவனித்துக் கொள்வார் என்று நம்பினார். ஆக மரியாள் யோவானைக் கட்டி அழ, ஒரு உரிமை அங்கு பெலப்பட்டது.

இயேசுவைக் கல்லறையில் வைத்த பின்பு கல்லறையை மூடியிருந்த கல் புரட்டப்பட்டிருந்ததை மகதலேனா மரியாள் யோவானுக்கும் பேதுருவுக்கும் அறிவித்தாள். அவர்கள் அதைக் காண்பதற்கு வேகமாகச் சென்றார்கள். இயேசுவின் சரீரம் காணப்படவில்லை. சீலை துணிகள் மட்டும் சுருட்டப்பட்டு கிடந்தது.இயேசு உயிர்த்தெழுந்தார் என்று அறிந்து கொண்டார்கள். (யோவன் 20:1-8) ஆனால் அவர் உபத்திரவப்பட்டு ஏன் மரிக்க வேண்டும் என்ற கேள்வி அனைத்து சீஷர்களுக்குள்ளும் எழும்பிற்று.

இயேசுவின் மரணத்தின் மூலம் வந்த ஏமாற்றத்தின் நிமித்தம் அவர்கள் தங்களுடைய தொழிலுக்கு திரும்பினார்கள். ஒரு நாள் காலையில் அப்போஸ்தலனாகிய,பேதுரு, யாக்கோபு, தோமா, நாத்தானியேலும் இன்னும் சிலரும் இரவு முழுவதும் வலைகளை வீசியும் மீன்கள் அகப்படாததினால் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். கரையில் இருந்து ஒருவர், மற்றொரு பக்கம் உங்கள் வலைகளை வீசுங்கள் என்றார். அப்படியே அவர்கள் வலையை வீச படகு அமிழத்தக்க மீன்களைப் பிடித்தார்கள். யோவானின் இருதயம் இயேசுவோடு

இணைந்திருந்ததினால் யோவான் அவரை இயேசு என்ற அடையாளம் கண்டு கொண்டு பேதுருவைப் பார்த்து, அவர் கர்த்தர் என்றார் (யோவான் 21:2-7) நம்முடைய வாழ்க்கைக்கும் இது ஒரு அருமையான எடுத்துக் காட்டாக இருக்கிறது. நாம் அவருடைய இருதயத்திற்கு ஏற்ற வாழ்க்கையை வாழ்ந்தால், அவருடைய அழைப்பையும், செயலையும் உணர முடியும்.

அநேக முறைகள், உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்டு பலப்பட்ட பின்பு, பெந்தேகோஸ்தே நாளில் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற ஆயத்தமாக இருந்தார்கள். பெந்தேகோஸ்தே நாளில் யோவானும் அவர்களோடு இருந்தார். (அப்போஸ்தலர் 2:5-7) அந்த நாளில் பரிசுத்த ஆவியைப் பெற்ற போது அந்த ஆவியின் வரத்தை முதலில் உபயோகித்தவர்கள்யோவானும்,பேதுருவும், அவர்கள் ஒரு முடவனைக் குணப்படுத்தினார்கள். இந்த இருவருக்கும் இரண்டு முக்கியமான பாடங்கள் அடங்கியிருந்தது. முதலாவதாக ஆண்டவருடைய வருகையையும், இந்தபூமிக்குரிய சீர்திருத்துதலையும் குறித்து சாட்சியிட உதவியாக இருந்தது. (அப்போஸ்தலர் 3:11-26) இரண்டாவதாக சத்தியத்தின் நிமித்தம் ஆண்டவருடைய உபத்திரவங்களில் பங்கைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்று அவர்கள் உணர்ந்தார்கள். இந்த அற்புதத்தைச் செய்ததினால் மத குருக்களால் அவர்கள் உபத்திரவப்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். ஆனால் அந்த முடவன் சிறைக்குச் சென்று தேவனுடைய பிள்ளைகளுக்கு உதவியாக இருந்தார். இதினிமித்தம் இவர்கள் சோர்ந்து போகாமல். இன்னும்அதிகமாக ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிக்கத் தொடங்கினார்கள். இவர்களை மத குருக்கள் முன்பாக அழைத்துக் கொண்டு வந்த போது தைரியமாக சத்தியத்தைப் பிரசங்கித்தார்கள்.

(அப்போஸ்தலர் 4:1-21) இதுபோல் நம்முடைய வாழ்க்கையிலும் சத்தியத்தின் நிமித்தமாக வரக்கூடிய பாடுகளை சந்தோஷமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சிறையில் இருந்து வெளியே வந்தவுடன் யூதேயாவில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துப் கொண்டு மரியாளைப் பராமரித்துக் கொண்டும் வந்தார். யோவான் அதிகமான அற்புதங்களைச் செய்து அநேக மக்களை கிறிஸ்துவுக்குள் அழைத்தார். அநேக மத குருக்கள் இதை எதிர்த்தார்கள். ஆனாலும் அவர் தொடர்ந்து செயல்பட்டார். அப்போஸ்தலராகிய பவுல் இவர்களை சபைக்குத் தூண்கள் என்று அழைத்தார். கலாத்தியர் 2:9

எருசலேமின் அழிவுக்கு முன்பாக யோவான் புறஜாதிகளின் பட்டணமான எபேசுவுக்குச் சென்றார், என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். கி.பி 90ம் வருடத்தில் அவரை பத்மு என்ற தீவிற்கு நாடுகடத்தப்படும் வரைக்கும் அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததாகச் சொல்லப்படுகிறது. உபத்திரவத்தின் காலத்தில் ஆதிகால சபை மக்கள் இந்தத் தீவுக்கு தண்டனைக்காக அனுப்பப்பட்டார்கள். ஆனால் அந்தத் தீவில் யோவான் கிறிஸ்துவின் நிமித்தம் பாடுபடுவதற்குப் பங்கு கிடைத்ததினால் சந்தோஷம் அடைந்தார். ஆகவே தேவன் அவரை மிகவும் ஆசீர்வதித்து, அவருக்கு கடைசி காலத்தில் நடக்கக்கூடியவைகளைத் தரிசனமாகக் காட்டினார். அதை வேதாகமத்தின் கடைசி புத்தகமாக இன்றைக்கும் நாம் வாசித்துக் கொண்டிருக்கிறோம். (யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்)

கடைசியாக அவர் சிறையில் இருந்து விடுதலை பெற்ற பின்பு எபேசுவில் மீதி வாழ்க்கையை வாழ்ந்தார். அவருக்கு இருந்த வைராக்கியமான பக்தியும் அன்பும் ஆண்டவருடைய வேலைகளை இன்னும் அதிகமாகச் செய்ய உதவியாக இருந்தது. தேவனுடைய கிருபையால் புதிய ஏற்பாட்டில் ஐந்து புத்தகங்களை எழுதினார். கிறிஸ்துவின் சாயலை தரிசிப்பதற்குத் தேவையான காரியங்கள் அதிகமாக அவருடைய புத்தகங்களில் காணலாம். (வெளி 1:1) வசனத்தில் தன்னை ஒரு ஊழியக்காரன் என்று தாழ்மையோடு அறிக்கையிடுகிறார். விசேஷமான தரிசனங்களைப் பெற்றதினாலே பரலோகத்தில் இயேசுவின் வேலைகளைக் குறித்து ஆதிகாலமாக அறிந்திருந்தார். யோவானுடைய

ஒவ்வொரு புத்தகங்களிலும், இயேசுவின் வாழ்க்கையிலும், போதகங்களிலும், அடையாளமாக அநேக ஆவிக்குரிய காரியங்களையும், இயேசுவின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் சபைக்கு மிகவும் உற்சாகத்தை ஊட்டச்கூடியதாகவும் அநேக பாடங்களைக் கற்றுக் கொடுப்பதாகவும் இருக்கிறது. மற்ற மூன்று சுவிசேஷங்களும் (முத்தேயு, மாற்கு, லூக்கா) இயேசுவின் பூமிக்குரிய வேலைகளை பற்றி அதிகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.



அப்போஸ்தலர்களின் வரிசையில் யோவான் கடைசியாக மரித்தவர். ஆனால் அவருடைய சகோதரன் யாக்கோபு முதலில் மரித்து விட்டார். ஏறத்தாழ எல்லா அப்போஸ்தலர்களும் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டார்கள். ஆனால் யோவான் இயற்கையான ஒரு மரணத்தை அடைந்தார். இயேசுவுக்குள் இருக்கும் விசுவாசிகளுக்கு, யோவான் ஒரு அருமையான மாதிரியாக இருந்தார். இன்பத்திலும் , துன்பத்திலும் தேவனை மகிமைப்படுத்தக்கூடிய வாழ்க்கையை வாழலாம் என்று நமக்கு அவர் மாதிரியை விட்டுச் சென்றார். அவர் ஆட்டுக்குட்டியானவரின் அப்போஸ்தலனாகும்படி முழுமையாகத் தகுதி பெற்றார்.





# பாடம் 8

# அப்போஸ்தலனாகிய தோமா

தோமாவும் ஒரு கலிலேயனாக இருந்தார். இவரும் ஒரு மீன் பிடிக்கும் தொழிலைச் சேர்ந்தவராக இருந்திருக்க வேண்டும். தோமாவை திதிமு என்று அழைத்தார்கள். இதற்கு இரட்டை என்று அர்த்தமாம். ஒரு வேளை இவர் இரட்டைப் பிள்ளைகளில் ஒருவராகவும் இருந்திருக்கலாம். ஆனால் வேதத்தில் இதைப்பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை.

நேசிக்கப்பட்ட ஆண்டவர்மேல் இவர் வைத்திருந்த விசுவாசமும் , பக்தி வைராக்கியமும் அவருக்குள் இருந்த ஒரு விசேஷமான குணமாகும். அவர் நினைப்பது சரி என்று தோன்றினால், மற்றவர்களை தைரியமாக எதிர்ப்பார். வேதாகமத்தில் இரண்டு முறைகள் தோமாசரியான முடிவுகளை எடுத்து உறுதியாக இருந்தார் என்பதைக் காட்டுகிறது. ஒரு முறை தவறான கருத்தில் உறுதியாக நின்றார்.

முதல் எடுத்துக்காட்டாக இயேசுவும் மற்ற அப்போஸ்தலர்களும் ஒரு அபாயத்திலிருந்து தப்பிப் போகும்படி சொல்லும் போது தோமா மற்றவர்களை எதிர்த்தார். இயேசு தேவனுடைய குமாரன் என்று சொன்னதினால் கோபம் அடைந்த யூதர்கள் இயேசுவையும் அவருடைய சீஷர்களையும் கல் எறிய பார்த்தார்கள். (யோவான் 10:33,36,39) அங்கு இருந்த அனைவரும் ஒரு பாதுகாப்பான இடத்திற்குச் சென்றார்கள். உடனே லாசருவின் மரணச்செய்தி அனைவருக்கும் எட்டியது. இயேசு மீண்டுமாக யூதேயா செல்ல பயணப்பட்டார். அனைவருக்கும் இதற்கு மறுப்பு தெரிவித்தார்கள், ஆனால் தோமா மட்டுமே, அபாயத்தை

அறிந்திருந்தும், இயேசுவோடு அனைவரும் மரிக்கும்படி துணிந்து பேசினார். தோமாவுக்கு இது ஒரு அற்புதமான குணமாக இருந்தது. அவர்கள் உபத்திரவப் படுகிறதற்குப் பயந்தாலும் தோமாவின் வார்த்தைகள் அவர்களை உற்சாகப்படுத்தியது. அவருக்குச் சரியாகத் தோன்றியதில் நிலையாக நிற்பார். இவைகள் நமக்கும் ஒரு அருமையான பாடமாக அமைகிறது. (யோவான்-11:3,4,7,8,16)

அடுத்ததாக அவர் ஒரு முறை தவறான சிந்தையில் உறுதியாக நின்றார் இயேசு உயிர்த்தெழுந்த பின்பு ஒரு சாயங்காலம் அனைவரும் மேல் வீட்டில் இருந்த போது உயிர்த்தெழுந்த இயேசுவைப் பற்றி அனைவரும் சந்தோஷமாகக் பேசிக்கொண்டிருந்தார்கள். தோமா அவர்களை நம்பாமல் அவர்களுடைய தவறான சிந்தனைகளை ஊக்குவிக்கக்கூடாது என்று அவர்களோடு அவர் இருக்கவில்லை. அன்று இரவில் பூட்டின வீட்டில் இயேசு அவர்களுக்கு தன்னுடைய காயங்களோடு தரிசனமானார். தோமா இயேசுவை விசுவாசிப்பார் என்று எண்ணி அவரை அழைத்து வந்தார்கள். அவருடைய காயங்களில் என் விரலையிட்டால் தான் நான் விசுவாசிப்பேன் என்று சொன்னார். ஒரு வேளை இந்த விஷயத்தில் அவர் வஞ்சிக்கப்படுவாரோ என்று பயந்து சொல்லியிருக்கலாம்.

இந்த விஷயத்தில் அவர் தவறான முடிவை எடுத்தார். அநேகர் உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்டு சாட்சி கொடுத்தாலும் அவர் அதை நம்பவில்லை. ஆனால் அவர் தேவனுடைய சித்தத்தையும், திட்டத்தையும் அறிய வேண்டுதல் செய்திருக்கலாம். இது எல்லா கிறிஸ்தவர்களுக்கும் ஒரு பாடமாக அமைகிறது. (யாக்கோபு 1:5,6) இங்கே தோமா சோதிக்கப்பட்டார். ஆனால் அவருடைய தவறை இயேசு அன்பாகவும், பொறுமையாகவும், சுட்டிக்காட்டிய போது இயேசுவை அவர் விசுவாசித்தார்.



இவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறாததினால் இப்படி தவறுகிறார்கள், என்று இயேசு அறிந்து அவர்களுக்கு அநேக காரியங்களைச் சொல்லி ஆறுதலையும் தேறுதலையும் அளித்தார்.

ஒரு வாரத்திற்குப் பிறகு மீண்டுமாக அனைவரும் அதே இடத்தில் கூடி வந்தார்கள். அவ்வேளையில் தோமாவும் அங்கே இருந்தார். ஒரு வேளை அவர் ஜெபித்துக் கொண்டும் இருந்திருக்கலாம். திடீர் என்று இயேசு அங்கு தரிசனமாகி தோமாவை அழைத்து அவர் காணும்படி அவரிடம் தன் காயம் உள்ள கரங்களைக் காட்டினார். தோமா மனம் கசந்து



அழுதிருக்க வேண்டும். இயேசு அவரை நிராகரிக்கவோ, அவமானப்படுத்தவோ அப்படிச் செய்யாமல், நிச்சயமாக அவர் உயிர்த்தெழுந்தார் என்று தோமாவுக்கு மாத்திரம் அல்ல மற்ற கிறிஸ்தவர்களுக்கும் இதை வெளிப்படுத்த விரும்பினார். ஆனால் அவர் தோமாவைப் பார்த்து நீ என்னைக் கண்டு விசுவாசிக்கிறாய், காணாமல் என்னை விசுவாசிக்கிறவனே பாக்கியவான் என்றார். (யோவான் 20-29) இயேசுவின் மேல் இருக்கும் விசுவாசம் இரண்டு விதம் என்று தெரிகிறது. சிலர் காட்சிகளைக் கண்டு விசுவாசிப்பார்கள், சிலர் இயேசுவையும் அவருடைய வார்த்தைகளையும் வசனத்தின் மூலமாக விசுவாசிப்பார்கள். இப்படிக் காணாமல் விசுவாசிப்பதே மேலான விசுவாசம் என்று இயேசு குறிப்பிடுகிறார்.

ஆகவே இந்தப் பாடத்தில் தோமாவுக்குள் இருந்த அவிசுவாசத்தினாலே அவர் ஏமாற்றப்பட்டார். இது இந்த யுகத்தின் மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. ஒரு போதும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் சந்தேகம் இருக்கக்கூடாது. ஆண்டவர் இதை நிரூபிக்க அநேக ஆதாரங்களை நமக்கு வேதத்தில் தந்திருக்கிறார். ஒருவேளை இதில் சந்தேகங்கள் ஏற்பட்டால் முடிவுகள் பயங்கரமாக இருக்கும்.

தோமாவின் அனுபவங்களில் உயிர்த்தெழுதலுக்கேற்ற சாட்சிகள் அதிகமாகவே இருக்கிறது. இத்தனை சம்பவத்திற்கும் இயேசு

கோபப்படாமல், பொறுமையாக அவருக்கு மறு உத்தரவு சொல்லிப் புரிய வைத்தார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். ஒரு வேளை சத்தியத்தை அறியாத மக்கள், அதை விசுவாசிப்பதற்கு மறுத்து விட்டால் நாம் பொறுமையோடு அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். நாம் தேவனுடைய நீடிய அன்பையும், பொறுமையையும் அவர்களுக்கு எடுத்து சொல்ல வேண்டும். நாம் தேவனிடத்தில் நீடிய அன்பையும், பொறுமையையும் எதிர்பார்க்கிறபடியே நாம் மற்றவர்களிடம் இதே குணங்களை வெளிப்படுத்த வேண்டும். தோமாவைப் போல் நாம் தொடக்கத்தில் அவிசுவாசிகளாக இருந்தாலும் முடிவில் அநேக சாட்சிகளைப் பெற்று விசுவாசத்தில் உறுதிப்பட வேண்டும். சிலர் தொடக்கத்தில் விசுவாசித்து விட்டு, சோதனைகள் வரும் போது தளர்ந்து விடுவார்கள். நாம் இப்படி இருக்கலாகாது ஆனால் நல்ல நோக்கத்துடன் நாம் வசனங்களைத் தேடும்போது பிதாவாகிய தேவன் நமக்கு ஏற்ற காரியங்களை வெளிப்படுத்துவார். அவர் பொறுமையோடு நம்முடைய வளர்ச்சிக்காக காத்திருக்கிறார். தோமா நேரில் கண்டவுடன் விசுவாசித்தார்.

இன்னும் ஒரு முறை மட்டுமே வேதாகமத்தில் தோமாவைப் பற்றி சொல்லப்படுகிறது. இயேசு உயிர்த்தெழுந்த பின்பு கலிலேயா கடற்கரையில் தோமாவுடன் கூட ஆறு பேருக்கு அவர் தரிசனமாகி அந்த அற்புதத்தைச் செய்தார். (யோவான் 21:1-6) இதன் மூலமாக தோமாவின் விசுவாசம் இன்னும் பெலப்பட்டது.

வேத ஆராய்ச்சியாளர்கள் தோமா சந்தேகப்பட்டது போல நாமும் சந்தேகப்படாமல் இருக்க வேண்டும் என்று எழுதுகிறார்கள். ஆனால் தோமா சந்தேகப்பட்ட விசுவாசத்தில் மிகவும் உறுதிப்பட்டு. தைரியமாக தேவனை அறியாத நாடுகளான இந்தியா, பாபிலோன், பெர்சியாவுக்குள் நுழைந்து சுவிசேஷத்தை அறிவித்தார். இயேசுவின் மேல் வைத்த அன்பினாலும், தேவனுடைய திட்டங்களை அறிவித்ததினாலும் அவர் கொல்லப்பட்டார். அவர் சபைக்கு ஒரு உறுதியான அஸ்திபாரக் கல்லாக இருந்து 12 அப்போஸ்தலர்களில் ஒருவராக இடம் பெற்றார்.





# பாடம் 9
# அப்போஸ்தலனாகிய மத்தேயு

ரோம அரசாங்கத்தில் வரிவசூலிப்பவராக மத்தேயு பணிபுரிந்து வந்தார். மத்தேயு தன்னை "ஆயக்காரன்" என்று அழைத்துக் கொண்டார். (மத்தேயு 10:3) யூதர்களில் வரி வசூலிப்பவர்களை இப்படித் தான் அழைப்பார்கள். இதை ஒரு தரக் குறைவான வேலையாகவும் இஸ்ரயேல் தேசத்திற்கு விரோதமான, வேலையாகவும் கருதினார்கள். ஆகவே யூதர்கள் இந்த வேலையைச் செய்பவர்களைப் பாவிகள் என்று கருதினார்கள் கொலைகாரர்கள், வேசிகள், திருடர்களைப் போல இவர்களையும் எண்ணினார்கள். ஒருவன் சகோதரனிடமிருந்து பணத்தை எடுத்து வசதியுள்ள ஒரு அரசாங்கத்தினிடம் ஒப்படைப்பதை தேவனுக்குஎதிரான செயல் என்று நம்பினார்கள். இந்த வரி வசூலிப்பவர்கள் மிகுந்த அறிவும் சாமார்த்தியமும் உள்ளவர்கள். இவர்கள் பணத்தை வசூலிப்பதற்கு தகாத முறைகளையும் சில நேரங்களில் பயன்படுத்துவார்கள். மத்தேயு ஒரு நேர்மையான வரி வசூலிப்பவராக இருந்தாலும், யூதர்கள் அவரை பாவியாக எண்ணி அவரை வெறுத்தார்கள் ஆகவே மத்தேயு சுவிசேஷத்தில் நாம் பாக்கும் போது இவர் வரிவசூலிப்பவராக இருந்தாலும் அவர் ஒரு தாழ்மையுள்ள மனிதனாகவே இருந்தார். அவர் பழைய காரியங்களைக் குறித்து எந்த விளக்கமும் சொல்லாமல், தேவனுடைய புதிய ஆவியின் மூலம் வரும் மாற்றங்களில் அவர் மிகவும் ஆர்வம் காட்டினார். (1 கொரிந்தியர் 1:26-29)

அவர் அந்தத் தொழிலைச் செய்யும் போது "லேவி" என்றழைக்கப்பட்டார். (லூக்கா 5:27) அப்போஸ்தலனாக அழைக்கப்படும்

போது அவர் மத்தேயுவாக இருந்தார். மத்தேயு என்பதற்கு "தேவனுடைய பரிசு" என்று அர்த்தமாம். மத்தேயுவின் தந்தை கிலியோபாஸ், இயேசு உயிர்த்தெழுந்த பின்பு எம்மா ஊருக்குப் போனவர்களில் இவரும் ஒருவராக இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. மத்தேயுவின் தாயும் இயேசுவுக்கு சீஷராக இருந்தாள். ஆகவே மத்தேயுவின் தாயும்-மரியாளும் நெருங்கிய சிநேகிதிகளாக இருந்திருக்க வேண்டும். ஆகவே இவர்கள் இருவரும் சிலுவையின் அண்டையில் நின்று



அழுதுக்கொண்டிருந்தார்கள். இயேசுவின் கல்லறையில் அவருடைய சரீரம் காணப்படாமல் போன போது மத்தேயுவின் தாயும் அங்கும் இருந்தாள் (யோவான் 19:25) (மாற்கு 16:1) சிறிய யாக்கோபு என்றவர் மத்தேயுவின் சகோதரராக இருந்தார். இவரும் இயேசுவுக்கு அப்போஸ்தலனாக இருந்தவர். அவருக்கு யோசேப்பு என்னப்பட்ட மற்றொரு சகோதரரும் இருந்தார். அவர் இயேசுவுக்குச் சீஷராக இருந்திருக்க வேண்டும். (மாற்கு 15:40)

இயேசுவின் தாய் மரியாளும், மத்தேயுவின் தந்தை கிலியோபாசும் சகோதர, சகோதரிகள், இப்படியாக இந்த இரு குடும்பத்தாருக்கும் நெருங்கிய உறவு இருந்தது. இந்த உறவுகள் உண்மையாக இருந்திருந்தால் இயேசு மத்தேயுவை அழைக்கும் முன்பதாகவே அவரைக்குறித்து நன்கு அறிந்திருக்க வேண்டும். அதே போல் மத்தேயுவுக்கும் இயேசுவைப் பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும். கலிலேயாக் கடல் அருகில் இருந்த கப்பர்நகூம் என்னும் இடம் ஒரு பிரபலமான மீன் பிடிக்கும் இடமாக இருந்தது. அநேக முறைகள் இயேசு அங்கு தேவனுடைய வார்த்தைகளை சுவிசேஷமாக பிரசங்கித்தார். மத்தேயு இந்தப் பட்டணத்தில் இருந்துகொண்டு பணியாற்றி வந்தார். ஆகவே அவருக்கு அப்போஸ்தலனாக அழைக்கப்படும் முன் இயேசுவை

பின்பற்ற வேண்டும் என்ற விருப்பம் இருந்திருக்க வேண்டும். ஒருநாள் இயேசு கப்பர்நகூமில் பிரசங்கித்த போது மத்தேயு மிக துரிதமாக வரிகளை வசூலித்து கொண்டிருந்தார். அப்போது இயேசு அவரைக் கண்டு “என்னைப் பின்பற்றி வா” என்றார். அந்த வார்த்தைகள் மத்தேயுவுக்கு எவ்வளவு ஆச்சரியமாகவும், மேன்மையாகவும் இருந்திருக்க வேண்டும்.

வீதிகளில் நடக்கும் மத்தேயுவை அனைவரும் ஏளனமாகப் பார்ப்பது வழக்கமாக இருந்தது. அவருக்குள் இருந்த பக்தி வைராக்கியத்தை ஒருவரும் கண்டதில்லை. ஆனால் இயேசு மத்தேயுவின் இருதயத்தில் மறைந்திருக்கும் அன்பான குணத்தைக் கண்டார். பாவிகளை மன்னிக்கிற இயேசு என்னையும் நிச்சயமாக மன்னிப்பார் என்று அறிந்து அவரைப் பின்பற்றினார். (மாற்கு 2:13-14)

அரசாங்கத்திலும், பணத்திலும் செல்வாக்கு நிறைந்த மத்தேயு இயேசு அழைத்தவுடன் அனைத்தையும் விட்டு விட்டுச் சென்றார். அதுமட்டுமல்ல, அவர் குடும்பம், நண்பர்கள் இன்னும் அநேகரை இழந்து தன் தொழிலை விட்டுவிட்டு இயேசுவைப் பின்பற்றுவதை அறிவித்தார். அவர் அனைவருக்கும் ஒரு பெரிய விருந்தைச் செய்து தான் அழைக்கப்பட்ட விதத்தையும் தான் அனுபவித்த சந்தோஷங்களையும் அனைவரோடும் பகிர்ந்தார் (மாற்கு 2:15) கிறிஸ்தவனுக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்த ஒரு காரியத்தில் அவருடைய மனைவியும் இணைந்து செயல்பட்டிருக்க வேண்டும்.

இயேசு பொதுவான இடங்களில் கூடிப் பேசும்போது பாவிகளும், ஆயக்காரர்களும், அங்கு கூட இருந்தார்கள். இதைக் கண்ட பரிசேயர் இவரைக் குற்றம் கண்டுபிடித்து கேலி செய்தார்கள். இவர்களுடைய இருதயம் குற்றம் கண்டுபிடிக்கும் நோக்கத்தோடே இருந்தது. ஆனால் இயேசுவை ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் குற்றம் சொல்லிக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் பரிசுத்தவான்கள் அல்ல என்று சுட்டிக்காட்டிக் கொண்டே வந்தார். ஆனால் இந்தப் பாவிகளுடைய பாவத்தை தேவன் மன்னிப்பார் என்பதை அவர்களுடைய இருதயத்தில் உணர வைப்பதற்காக இயேசு அந்த ஆயக்காரரோடு அடிக்கடி கூடி வந்தார். (மாற்கு 2:16-17)

ஆனால் இயேசு பாவிகளோடு சேர்ந்த பாவிதான் என்று யூதர்கள் போதித்து வந்தார்கள். யோவானின் சீஷர்களும் நாங்களும் உபவாசிக்கிறோமே ஆனால் நீயும் உன் சீஷர்களும் உபவாசிப்பதில்லையே என்று குற்றம் சாட்டினார்கள். “மணவாளன் தங்களோடு இருக்கையில் அவர்கள் உபவாசிக்க வேண்டிய அவசியம் இல்லை” என்று இயேசு பதில் அளித்தார். (மாற்கு 2:18-20) இது பரிசேயர்களால் புரிந்து கொள்ள முடியாத ஒரு உவமையாக இருந்தது. அவர்கள் மேட்டிமையுள்ள வணங்காக் கழுத்துள்ளவர்களாக இருந்தார்கள். அவர்கள் உபவாசித்தாலும், மேட்டிமையான சிந்தையினால் அதனுடைய நோக்கத்தை அறியாதவர்களாக இருந்தார்கள். அக்காலத்தில் உணவைத் தவிர்த்து தேவனிடத்தில் தியானம் செய்வது வழக்கமாக இருந்தது. ஆனால் இப்படிச் செய்வதால் மற்றவர்களை விட நாம் அதிக பரிசுத்த முள்ளவர்கள் என்று போதித்தார்கள். இப்படிச் செய்வதினால் அவர்கள் செய்த பாவங்களை மறைத்து விட்டு மற்றவர்கள் செய்யும் பாவங்கள் கண்களுக்கு முன் நிற்கிறது. இவர்களை இயேசு மாயக்காரரே என்று அழைக்கிறார்.

மத்தேயுவை பற்றி அதிகமாக வேதத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை ஆனால் அவர் பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்பு யூதேயாவிலும் கலிலேயாவிலும் 15 வருடங்கள் சுவிசேஷத்தை பிரசங்கித்து வந்தார், என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். இவர் யூதர்களுக்குமட்டும் பிரசங்கித்திருக்க வேண்டும். இவர் ஆவிக்குரிய ராஜ்யத்தைப் பற்றி அநேக பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளை பற்றி எழுதியிருந்தவர். மற்ற மூன்று சுவிசேஷத்தை விட இதைக் குறித்துஇவர் அதிகமாகவே எழுதியிருக்கிறார். பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டகாரியங்களை இயேசுவோடு ஒப்பிட்டு எழுதுவதில் மிகவும் தேறினவராக இருந்தார். ஆகவே அநேக யூதர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டார்கள். அவர் இயேசுவே, பழைய எற்பாட்டில் சொல்லப்பட்டு வந்திருக்கும் மேசியா என்றும் ராஜா என்றும் நிரூபித்து வந்தார்கள். இதை குறித்துக் புறஜாதிகள் அறியாதவர்களாக இருந்தார்கள். இவர்கள்

நியாயபிரமாணத்தையும், சட்டங்களையும் அறியாதவர்கள். மேசியாவின் உபதேசங்கள் பிரசங்கிக் கப்படும் போது, எருசலேமின் அழிவைக் குறித்துச் சொன்ன காரியங்கள் நிறைவேறிக் கொண்டு வந்தபோது மத்தேயு பெர்சியாவுக்குச் சென்றிருக்க வேண்டும். அங்கு புறஜாதிகள் அவர் சொன்ன சத்தியத்தை ஏற்றுக்கொண்டாலும் அரசர்கள் இதை எதிர்த்து அவரைக் கொலை செய்தார்கள்.

அவர் தன்னுடைய சுயத்தை வெறுத்து சிலுவையை சுமந்தவர். இப்படி ஒருவர் வாழ்ந்தால் நித்தியமாக இயேசுவோடு எக்காலமும் வாழலாம் (11 தீமோத்தேயு 3:12) அவருடைய எழுத்துக்களில் எளிமையும், உற்சாகமும் எஜமானுக்குரிய அன்பையும், வைராக்கியத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார். இவர் ஆட்டுக்குட்டியானவரின் அப்போஸ்தலனாவதற்கு தகுதிபெற்றவர்.







# பாடம் 10

## அப்போஸ்தலனாகிய சிறிய யாக்கோபு ஸ்காரியோத் அல்லாத யூதாஸ், கானானியனான சீமோன்

சிறிய யாக்கோபு லேவியின் சகோதரனாக இருந்தவர். கலிலேயாவில் உள்ள கப்பர்நகூமில் வாழ்ந்து வந்தார்கள். கிலியோபாசுக்கும் மரியாளுக்கும் பிறந்த கடைசி குமாரன் யாக்கோபு. இவர்கள் தேவனுடைய ஆவியைப் பெற்றதினால் இவருடைய பெற்றோர்கள் இயேசுவுக்கு சீஷர்களாக இருந்தார்கள். (லூக்கா 24:18, யோவான் 19:25)

இவரைப்பற்றி அதிகமான குறிப்புகள் இல்லாவிட்டாலும், அப்போஸ்தலனாக அழைக்கப்பட்டிருக்கிறார். இவர் ரோம அரசாங்கத்தை எதிர்த்த ஒரு பக்தியுள்ள யூதனாக இருந்தார். இவர் தீவிரவாதச் செயல்களைச் செய்திருக்க வேண்டும். ஆனால் கிறிஸ்துவைப் பின்பற்றினவுடன் இவை எல்லாவற்றையும் அவர் விட்டு விட்டார். இவர் தீவிரவாதியாக இருந்திருந்தால் நிச்சயமாக வரி வசூலிப்பவனாக இருந்த லேவியை வெறுத்திருக்க வேண்டும்.



இவர் யாக்கோபு என்ற நிரூபத்தை எழுதினவர், கிறிஸ்தவ வாழ்க்கைக்கு தேவைப்பட்ட விசுவாசத்யையும் அதற்கான கிரியைகளையும் பற்றி மிகத் தெளிவாக எழுதினவர், கிரியை இல்லாத விசுவாசம் செத்தது என்றார். (யாக்கோபு 2:17) அவருடைய நிரூபத்தில் இன்னும் அதிகமான கிறிஸ்தவ வாழ்க்கைக் குரிய காரியங்களை நாம் கற்றுக் கொள்ளலாம்.

இவர் ஸ்பானிய நகரங்களில் சிறைப்பட்டிருந்த யூதர்களுக்கு சுவிசேஷம் அறிவித்ததாகச் சொல்லப்படுகிறது. மீண்டுமாக அவர் எருசலேமுக்கு வந்து யூதர்களுக்குப் போதித்துக்கொண்டிருக்கும் போது கல்லெறியப்பட்டுமரித்தார். சிறிய யாக்கோபு அப்போஸ்தலனாக அழைக்கப்படுமுன் தீவிரவாதியாக இருந்தாரா, அல்லது ஆண்டவரின் நாமத்திற்க்காக, மரித்தாரா என்பது தெளிவாகச் சொல்லப்பட வில்லை. ஆனாலும் அவர் நிச்சயமாக சபைக்கு ஒரு உறுதியான அஸ்திபாரமாக இருக்கிறார். இவரைப் பற்றி குறைவான காரியங்கள் கொடுக்கப்பட்டிருந்தும் இயேசுவால் அழைக்கப்பட்ட அப்போஸ்தலனாக இருக்கிறார். இயேசு அவரை நேசித்து அவருக்காக வேண்டுதலையும் செய்தார் (யோவான் 17:11,12)



அப்போஸ்தலனாகிய ஸ்காரியோத்தல்லாத யூதாவைப் பற்றி மிகவும் குறைவாக வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர் யூதாஸ்காரியோத்தைப் போல இல்லாமல் வித்தியாசமான குணத்தை உடையவர். இவரை "லெபியேஸ்" என்றும் அழைத்தார்கள். லெபியேஸ் என்பதற்கு இருதயத்திற்கு பிரியமானவர் என்று அர்த்தம். புதிய ஏற்பாட்டில் வெகு சில இடங்களில் மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (யோவான் 14:22) அப்போஸ்தலர்கள் இராபோஜனத்தைப் புசிப்பதற்கு ஒருமித்து இருக்கையில் இந்த யூதா ஒரு கேள்வியைக் கேட்டார். ஆண்டவரே நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணமென்ன என்றார். என்னை நேசித்து என் பிதாவின் கற்பனைகளைக் கடைபிடிப்பவர்கள் மட்டுமே என் வார்த்தைகளைப் புரிந்துகொள்ள முடியும் என்று இயேசு பதில் அளித்தார். ஆகவே ஆவியில் எளிமையுள்ளவர்கள் மட்டுமே இயேசுவின் ஊழியத்தையும், அவரைப் பற்றியும் புரிந்துக்கொள்ள முடியும்.

இருதயத்தில் பரிசுத்தமுள்ளவர்கள் தேவனை தரிசிப்பார்கள். (மத்தேயு 5:8) இப்படி இருந்தால் பிதாவும் இயேசுவும் அவர்கள் அருகில் இருந்து வழிநடத்தி காத்துக் கொள்ளுவார்கள் என்பதையும் வலியுறுத்தினார். (யோவான் 14:23) மறு நாள் இயேசு மரிக்கப்போவதை அறிந்து இந்த சீஷர்களைத் திடப்படுத்தினார்.

இவர் யாக்கோபின் சகோதரன் என்று (லூக்கா 6:16) குறிப்பிடுகிறார். ஒரு வேளை இது அப்போஸ்தலனாகிய யாக்கோபாகவும் இருக்கலாம். அப்போஸ்தலனாகிய யோவானின் சகோதரனும் இவர்கள் செபேதேயுவின் குமாரர்களாக இருக்கிறார்கள். சிறிய யாக்கோபின் குமாரனாக இருக்க வாய்ப்பு இல்லை, அல்லது இவர் இயேசுவின் கடைசி இளைய சகோதரனாகவும் இருக்க முடியாது. இவர்கள் ஒரு அப்போஸ்தலரைப் பெற்றெடுக்கும் அளவுக்கு பெரியவர்கள் இல்லை. ஆகவே யூதா அப்போஸ்தலனாகிய பெரிய யாக்கோபின் மகனும் செபேதேயுவின் பேரனாகவும் இருக்க வேண்டும். யோவான் அவருடைய பெரியப்பாவாக இருக்க வேண்டும். எனவே யூதாவின் தந்தை இயேசுவுக்கு ஒன்று விட்ட சகோதரனாவார். ஒரு குடும்பத்தில் ஒருவர் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும்போது அதே குடும்பத்தைச் சேர்ந்த அநேகர் இந்த சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுகிறது. மேற் கூறிய காரியங்கள் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

ஸ்கோரியோத் அல்லாத யூதா புதிய ஏற்பாட்டில் யூதா என்ற புத்தகத்தையும் எழுதியிருக்கிறார். என்னில்உண்மையாக விசுவாசம் வைத்து என் பிதாவின் கட்டளைகளைக் கடைபிடிப்பவர்கள் என் வார்த்தைகளைப் புரிந்து கொள்வார்கள் என்ற இந்தக் கருத்தை மையமாகக் கொண்டது தான் யூதா நிரூபமாக எழுதியிருக்கிறார். அவர் இயேசுவின் சீஷர்கள் தேவனுடைய அன்பில் நிலைத்திருப்பதற்கு தேவனுடைய வசனங்களைக் காத்து நடக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இது சிறிய புத்தகமாக இருந்தாலும் அநேக சத்தியங்களை வல்லமையாக வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கிறது.

அர்மேனியாவில் உள்ள சபை வரலாற்றில் அப்போஸ்தலனாகிய

யூதாவும், நாத்தானியலேலும் சுவிசேஷத்தை பிரசங்கித்ததாக சொல்லப்படுகிறது. கி.மு. 301 ம் வருடத்தில் அர்மேனியா நாடு முதன் முதலில் ஒரு கிறிஸ்தவ நாடாகக் கருதப்பட்டது. அதாவது கிறிஸ்தவ மதம் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.



இது நிமித்தமாக அந்த அரசாங்கம் மிக கோபமடைந்து இதற்குக் காரணமாய் இருந்த யூதாவையும், நாத்தானியேலையும் கொன்று போட்டது. இப்படியாக அப்போஸ்தலனாகிய யூதா ஆண்டவருக்கு ஒரு விசுவாசமுள்ள ஊழியக்காரராக இருந்தார்.

பெந்தக்கோஸ்தே நாளின் போது பல வரங்களைப் பெற்றவர்களில் இவரும் ஒருவர் (அப்போஸ்தலர் 1:13) ஆரம்ப கால சபையில் இருந்த அப்போஸ்தலர்கள் பூமியெங்கும். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வரத்தை மிக ஞானமாகப் பயன்படுத்தினார்கள். இப்படியாக யூதா அவருடைய பொறுப்புகளை உணர்ந்து விசுவாசமான அப்போஸ்தலனாக இருந்தார்.

ஒரு விசுவாசமுள்ள ஊழியக்காரனாகிய கானானியனாகிய சீமோனைப் பற்றி வேதாகமத்தில் மிகவும் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கானானியன் என்பதற்கு செலோத்தே என்று மொழி பெயர்ப்பது மிகச் சரியாக இருக்கும் (லூக்கா 6:15 அப்போஸ்தலர் 1:13)

ரோம அரசாங்கத்தை எதிர்க்கும் ஒரு தேசபக்தியுள்ள யூதனை ரோம அரசாங்கத்தை எதிர்ப்பவனை செலோத்தே என்று அழைத்தார்கள். இப்படிப்பட்ட சீமோன் தன்னுடைய தீவிரவாதமான செயல்களை விட்டு விட்டு இயேசுவைப் பின் பற்றி அகிம்சையான சுவிசேஷத்தை



அறிவித்தார். (மத்தேயு 5:39,43,44,26:52) அவர் இங்கிலாந்து வரைக்கும் பிரசங்கித்ததாகவும், அதற்குப் பின்பு இந்த ஊழியத்தின் நிமித்தமாக கொல்லப்பட்டதாகவும் வரலாறு கூறுகிறது. இவர் மற்ற அப்போஸ்தலர்களோடு கூட இயேசுவைப் பற்றியும் அவர் உயிர்த்தெழுந்த அற்புதத்தைப் பற்றியும் சாட்சி கொடுத்தார். இவர்கள் அனவைருமே இயேசுவின் இராபோஜனத்திலும், கெத்சமனே தோட்டத்திலும் இருந்தவர்கள். தோமவிற்கு இயேசு தரிசனம் கொடுத்த போது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்று பூமியெங்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்தவர்களில் இவரும் ஒருவர். (அப்போஸ்தலர் 1:8-13) அப்போஸ்தலன் என்று அழைக்கப்படுவதற்கு மிகவும் பாக்கியசாலிகளாக இருந்திருக்க வேண்டும். ஆதிகால சபையை ஸ்தாபிப்பதற்கு ஒவ்வொரு அப்போஸ்தலர்களுக்கும் விசேஷமான வல்லமைகள் கொடுக்கப்பட்டது. இயேசுவின் அப்போஸ்தலர்களைத் தேர்வு செய்வதில் தேவன் மிகவும் ஞானமுள்ளவராய் இருந்தார். ஆகவே தேவனுடைய வல்லமையினாலும் கிருபையினாலும் சிறிய



யாக்கோபு யூதா சீமோன் இவர்கள் அனைவரும் ஆட்டுக் குட்டியானவரின் அப்போஸ்தலர்களாகவும் சபைக்கு உறுதியான அஸ்திபாரங்களாகவும் எஜமானுக்கு விசுவாசமுள்ள ஊழியக்காரர்களாகவும் இருந்தார்கள்.



# பாடம் 11
# அப்போஸ்தலனாகிய யூதாஸ்காரியோத்

யூதேயாவில் உள்ள பெலிஸ்தியாவின் தென் பகுதியில் இருந்து வந்தவர் யூதாஸ்காரியோத். ஆனால் மற்ற 11 அப்போஸ்தலர்களும் கலிலேயாவில் இருந்து வந்தவர்கள். யூதா என்பதற்கு “புகழ்ச்சி” என்று அர்த்தமாம். சீமோன் ஸ்காரியோத் என்பவர் இவருடைய தந்தை இவருடைய பெற்றோர் விசுவாசமுள்ள யூதர்களாக இருந்திருக்க வேண்டும்.

யோவான் ஸ்நானகன் போதித்துக்கொண்டிருக்கும் போது ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பற்றிக் கேட்டவுடன் ஈர்க்கப்பட்டிருக்க வேண்டும். இயேசுவின் போதனைகளைப் பெறுவதற்கு அவருடைய இருதயம் ஆயத்தமாக இருந்தது. மற்ற அப்போஸ்தலர்களோடு கூட யூதாஸ்காரியோத்தும் கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடப்பதற்கும் பாடுகள் அனுபவிப்பதற்கும் அழைக்கப்பட்டார். இவர் மற்றவர்களோடு இணைந்து ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். வியாதியஸ்தரைக் குணப்படுத்தினார். அவர் மூன்றரை வருடங்கள் இயேசுவோடு இருப்பதற்கான ஒரு கிருபை கிடைத்தது. இயேசு பிதாவாகிய தேவன் மேல் வைத்திருந்த பரிசுத்தமான விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் குறித்து இவர் சாட்சி கொடுத்தார். (மத்தேயு 10:5-8)

யூதாஸ் ஒரு சிறந்த வியாபாரியாக இருந்ததை இயேசுவும் மற்ற அப்போஸ்தலர்களும் கண்டு அவரை பொக்கிஷதாரராக்கினார்கள். இயேசுவும் மற்ற அப்போஸ்தலர்களும் சுயமாக வேலை

செய்யவில்லை . அவர் முழு நேரத்தையும் சுவிசேஷத்தை அறிவிப்பதில் முழ்கியிருந்தார். ஆகவே அவரை பின்பற்றினவர்கள் அடியார்கள் பணங்களை காணிக்கையாக இயேசுவுக்குத் தந்தார்கள். (லூக்கா 8:1-3) யூதாஸ் மிக நம்பிக்கைகுரிய ஆளாக இருந்ததினால் இந்தப் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மற்ற அப்போஸ்தலர்களைப் போல இவருக்கும் தேவ ஆவியின் வழிநடத்துதல் இருந்தது. யூதாஸ் அநேக எதிர்ப்பார்ப்புகளோடு இயேசுவோடு இருந்தார். இயேசு சீக்கிரத்தில் ரோம அரசாங்கத்தை எதிர்த்து இஸ்ரயேல் ராஜ்யத்தின் ஆளுகைக்கு கீழ் சகல மக்களையும் கொண்டு வந்துவிடுவார் என்று எதிர்பார்த்து கொண்டு இருந்தார். அப்போது முழு ராஜ்யத்தின் பொக்கிஷதாரராக நான் இருப்பேன் என்று கனவு கண்டு கொண்டிருந்தார். ஆனால் அவருடைய எதிர்பார்ப்புக்கு எதிராக இயேசு தன்னுடைய மரணத்தைக் குறித்துச் சொல்லும்போது அவருக்குப் பயம் உண்டாயிற்று. இயேசு தேவனுடைய விருப்பத்திற்கு எதிராகச் செயல்பட்டு விடுவாரோ என்று நினைத்தார். ராஜ்யத்தின் காரியங்கள் முற்றிலும் தோல்வி அடைந்துவிடும் என்று நினைத்தார்.

யூதாஸ் இயேசுவின் மேல்வைத்த அன்பும் விசுவாசமும் சோதிக்கப்பட்டது ஆனால் சுயநலமும் தற்பெருமையும் வேரூன்றியது. இந்த குணம் யூதாஸின் நற்குணங்கள் அனைத்தையும் மேற்கொண்டது. சகல மனிதர்களும் காணும் படியாக இயேசு இந்த உலகத்தின்மேல் பெற்ற அதிகாரத்தை ஏன் பயன்படுத்த வில்லை என்று இவர் ஆச்சரியப்பட்டார். ஆனால் ஒவ்வொரு அற்புதங்கள் நடந்த போதும் இயேசு மிகுந்த மனத்தாழ்மையோடு தேவனை மகிமைப் படுத்தினார்.



ஆகவே இயேசு ஒவ்வொரு முறையும் தன்னுடைய மரணத்தைப் பற்றியும் விவரித்துக்கொண்டு இருந்தார். யூதாஸைப்

போல மற்ற அப்போஸ்தலர்களுக்கும் இயேசு சொன்ன காரியங்கள் புரியவில்லை ஆனாலும் அவர்கள் அனைவரும் சுயமாகச் சிந்திக்காமல் இயேசுவின் சித்தத்தை செய்வதில் நோக்கமாக இருந்தார்கள். யூதாஸ் தன்னுடைய விருப்பத்தை இயேசு நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்பார்த்தார்.

இன்றைக்கு இருக்கக்கூடிய இளைய கிறிஸ்தவர்களுக்கு ஒரு முக்கியமான பாடம் இதில் அடங்கியுள்ளது. நாம் நம்முடைய இஷ்டத்திற்குச் செயல்படாதபடிக்கு நம்முடைய பெற்றோர் அல்லது பெரியோர் தடுக்கும் போது இந்தப் பிரச்சனைகளை இரண்டு விதமாக எதிர் நோக்கலாம். நாம் கோபமாகவே இருந்து கொண்டு அவர்களோடு வாக்குவாதம் செய்து அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக நம்முடைய சித்தத்தை செய்வது ஒரு முறையாகும். அடுத்ததாக நமக்குப் பிடிக்காத விஷயத்திலும் கூட பெற்றோருக்குப் பொறுமையோடு கீழ்ப்படிந்து நம்முடைய நன்மைக்காக அவர்கள் நம்மை வழிநடத்துகிறார்கள் என்று நம்ப வேண்டும். இப்படி நாம் முதல் முறையை கடைபிடித்தோமானால் எதிர்த்து போராடுவது என்றும் இரண்டாவது முறையை கீழ்ப்படிதல் என்றும் அழைக்கலாம். நம்முடைய ஆண்டவர் எதில் பிரியப்படுவார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? இயேசு மற்றவர்களை விட ஞானமுள்ளவர் என்று அறிந்தும் யூதாஸ் இயேசுவை எதிர்த்தான்.

காலங்கள் செல்லச் செல்ல அவன் தன்னுடைய சுய விருப்பத்தை மட்டும் நிறைவேற்றத் தொடங்கினான். தேவனுடைய ராஜ்யத்தை யூதாஸ் திட்டமிட்டபடி சீக்கிரத்தில் இந்த உலகத்தில் கொண்டு வர முயற்சி செய்தான். ஒரு வேளை தேவனுக்கு தன்னுடைய சேவை தேவைப்படுமோ என்று எதிர்பார்த்தான். இவன் செய்த ஒவ்வொரு காரியங்களும் மற்றவர்களுக்கு இடறலாக இருந்தது. மெதுவாக தன்னுடைய விருப்பங்களை நிறைவேற்றத் திட்டமிடத் தொடங்கினான்.

அவனிடம் இந்த பணப்பை ஒப்படைக்கப்பட்ட பின்பு தேவன் சகலத்தையும் தன்னிடம் ஒப்படைத்தார் என்று நினைத்திருக்க வேண்டும். இவர் வைத்திருந்த பணப்பையை தன்னுடையவை என்று எண்ணினான்.

அதற்குப் பின் அந்தப் பையில் பணத்தை சேர்க்க முயற்சி செய்தான். இயேசுவின் மரணத்திற்கு ஆறு நாட்களுக்கு முன்பாக மரியாள் இயேசுவுக்கு நளதம் என்னும் தைலத்தைப் பூசும்போது யூதாஸ் மிகவும் வருத்தப்பட்டு கடிந்து கொண்டான். மரியாள் தைலத்தை விரயம் செய்துவிட்டதாகக் கூறினான். இதை விற்று தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்று வருத்தப்பட்டார். மரியாளின்



அன்பான பலியை அவன் குற்றம் சாட்டினான். அதை விட இயேசுவையும் சீஷர்களுக்கு முன்பாக குற்றம் சுமத்த துணிந்து விட்டான். இதைச் சீஷர்களும் ஆமோதித்தனர், ஆனால் இயேசு அனைவரையும் அதட்டினார். அவளை விட்டு விடுங்கள் என்னை அடக்கம் செய்யும் நாளுக்கென்று இதை செய்தாள். என்றார். (மத்தேயு 26:7-12, யோவான் 12:3-8) யூதாவுக்கு பணத்தின் மேல் இருந்த ஆசையினால் இப்படிப் பேசினான். ஆகையால் அவன் ஆண்டவரின் மேல் வைத்த அன்பு அங்கு கேள்விக் குறியானது (1 தீமோத்தேயு 6:10)

இவனுடைய வாழ்க்கையில் நடந்த கடைசி சம்பவத்தின் நிமித்தமாக இயேசுவின் அப்போஸ்தலனாக இருக்கும் தகுதியை இழந்தான். இப்போது ஆண்டவரை சேவிப்பதை விட்டு விட்டு தன்னையும் தன்னுடைய திட்டங்களையும் சேவிக்கத் தொடங்கினான். தேவ ஆவியால் வழிநடத்தப்படாமல் சாத்தானின் ஆவியால் வழிநடத்தப்பட்டான். (யோவான் 13:2) மரியாள் தைலம் பூசின சம்பவத்திற்குப் பின்பு பிரதான ஆசாரியர்களிடம் போய் இயேசுவை நான் உங்களுக்குக் காட்டிக் கொடுத்தால் நீங்கள் எனக்கு என்ன தருவீர்கள் என்று கேட்டான்? அவர்கள் இயேசுவை கொலை செய்யும்படி வகை தேடிக் கொண்டிருந்தார்கள். ஆகவே 30 வெள்ளி காசுகளைக் கொடுப்பதாக வாக்களித்தார்கள். இதைக் குறித்த தீர்க்கதரிசனத்தை நாம் (சகரியா 11:12-13) வசனங்களில் வாசித்து அறியலாம்.



இந்த வாய்ப்பை யூதாஸ் நழுவவிடாமல் இயேசுகைக் காட்டிக் கொடுத்தான். (மத்தேயு 26:14-16) ராபோஜனம் புசிக்கும் நாள் வந்த போது அந்த இரவில் இயேசு, "உங்களில் ஒருவன் என்னை காட்டிக் கொடுக்கப் போகின்றான்....." என்று அப்போஸ் தலர்களிடம் சொன்னார். இன்னும் அநேக காரியங்களைச் சொல்லியும் அவர்களுக்கு எதுவும் புரியவில்லை. (யோவான் 13:26-29) ஒருவரோடு ஒருவர் அப்பம் புசித்தால், அவர்கள் சிநேகிதர்கள் என்றும் எண்ணப்படுவார்கள். யூதாசும் இயேசுவோடு அப்பம் புசித்த படியால் சிநேகிதன் என்று அவர் ஏற்றுக் கொண்ட பின்பு அவருக்குத் துரோகம் செய்தான். இது மிகப் பெரிய குற்றமாகக் கருதப்படுகிறது.

நீ செய்ய வேண்டியதை சீக்கிரமாகச் செய் என்று இயேசு சொன்னவுடன் யூதாஸ் உடனே பிரதான ஆசாரியனிடம் சென்று ஆசாரியர்களின் கூட்டத்தையும் வேலைக்காரர்களையும் மூப்பர்களையும் இயேசு இருந்த கெத்செமனே தோட்டத்திற்கு அழைத்துச் சென்றான். யூதாஸ் இயேசுவிடம் வந்து "ஆண்டவரே நீர் வாழ்க" என்று சொல்லி அவரை முத்தமிட்டான். யூதாஸ் இதைச் செய்தவுடன் இயேசு முழு அரசாங்க பொறுப்பையும் தன் கையில் எடுத்துக்கொள்ளுவார் என்று எண்ணினான் ஆனால், வந்த அனைவரும் இயேசுவை அடித்து இழுத்துச் சென்றார்கள். யூதாஸின் திட்டங்கள் நிறைவேறவில்லை என்று அவன் அறிந்தவுடன் மறு நாள் காலை அவன் பிரதான ஆசாரியனிடம் சென்று "நான் குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டி கொடுத்து விட்டேன், நான் பாவம் செய்தேன் என்று சொல்லி அந்த 30 வெள்ளிகாசை திருப்பிக் கொடுத்தான். அவர்களோ அதை வாங்கவில்லை. உடனே அந்தக் காசுகளை தேவாலயத்தில் எறிந்து விட்டு, நான்று கொண்டு செத்தான்.



யூதாஸ் தான் செய்த பாவத்திற்காக மனம் வருந்தினானா? தேவன் மட்டுமே இதை அறிவார். இவனுடைய வாழ்க்கையில் இருந்து நமக்குரிய பாடங்களையும் அனுபவங்களையும் நாம் கற்றுக் கொண்டு , இடறலுக்கு கேதுவான காரியங்களை விட்டு நாம் விலகி கிறிஸ்துவின் சாயலை தரிக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். "என் ஆண்டவரே, என்னை மன்னியும் நான் பாவம் செய்தேன். என்று கூறவில்லை. அதற்கு பதிலாக அவர் அடுத்தபாவத்தை துணிந்து செய்தான்." மற்ற சீஷர்களிடம் சென்று ஆலோசனைகளைக் கேட்டு மன்னிப்பைப் பெறுதவற்கு அவர்களிடம் பாவங்களை அறிக்கை செய்வதற்கு அவனுடைய மேட்டிமையான சிந்தை இடம் கொடுக்கவில்லை. அப்போஸ்தலனாகிய பேதுரு இயேசுவை மூன்று முறை மறுதலித்த போது, அவர் சகோதரர்களிடம் வந்து தன்னை திருத்திக் கொண்டார். யூதாஸ் மரிக்கும் வரைக்கும் அதே மேட்டிமையான சிந்தனையில் இருந்து விட்டான். (மத்தேயு 27:3-10) தான் மரிக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குள் இருந்ததே தவிர, தான் செய்த தவறுகளை அறிக்கையிட அவனுக்கு மனம் வரவில்லை. தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலை அவன் புரிந்து கொள்ளாமல், தான் மரிக்கப் போகிறதினால் ஒரு பிரயோஜனமும் இல்லை என்று அவன் அறியவில்லை. (மத்தேயு 13:11,12) தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்து இயேசுவுக்குப் பின் செல்ல தன்னை உடன்படிக்கையின் மூலம் ஒப்புக்கொடுத்த அந்த ஒப்பந்தத்தை தன்னுடைய சுயநலத்தாலே முறித்து விட்டான். அதற்குப் பதிலாக தற்கொலை செய்து கொண்டான்.

யூதாஸ் வாழ்க்கையில் தேவனுடைய அன்பின் பிரமாணம் எவ்வளவு நேர்த்தியாகக் கிரியை செய்திருக்கிறது என்று நாம் நினைக்கவேண்டும். ஒவ்வொரு மனிதனும் தேவனுடைய சித்தத்தைச் செய்வற்கு சுயாதீனம் பெற்றிருக்கிறார்கள். ஒரு மனுஷன் தவறான பாதையைத் தெரிந்து கொண்டாலும் தேவன் அதைத் தடுப்பதில்லை. ஒருவேளை தேவன் அதை அனுமதிக்காமல் இருந்தால் அவன் நிச்சயமாக சரியான பாதையில் நடப்பான் ஆனால் அப்படிச் செய்தால் அது தேவன் மேல் வைத்த அன்பினால் இல்லாமல் கீழ்ப்படிதலினால்

அப்படிச் செய்யலாம் ஆகவே ஒருவரையும் அவர் கட்டாயத்தின் பேரில் அல்ல, ஒவ்வொரு வரும் தேவனை விரும்பி நேசித்து ஜீவனுக்குரிய பாதையில் நடக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஆகவே தேவன் நம்மைச் சோதிப்பதற்கு நம்மை அனுமதித்தது, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் அனுபவங்களைப் பெற்று அதிலிருந்து தப்பித்து ஜீவனை அடையும்படி விரும்புகிறார். (1 கொரிந்தியர் 10:13)

யூதாஸின் விஷயத்தில் இயேசு அவன் மனம் திரும்புவதற்கு அவனுக்கு அநேக முறைகள் வாய்ப்புக் கொடுத்தார். அவரை முத்தமிட்டு காட்டிக் கொடுக்கும் வரை யூதாஸை பொறுமையோடு அன்பாக நேசித்து வந்தார். (மத்தேயு 26:49-50) கடைசியாக அவரிடத்தில் மன்னிப்பு கேட்கும் ஒரு வாய்ப்பையும் அவன் பெற்றிருந்தான். அந்த வாய்ப்பை அவன் பயன்படுத்தவில்லை. நம்மை சிலர் எதிர்க்கும் போது இயேசு நமக்கு வைத்திருக்கும் பாடத்தை நாம் சற்று யோசித்து பார்க்கவேண்டும். அந்தச் சூழ்நிலையில் நாம் நம்முடைய சகோதரர்களுக்கு நியாயத்தீர்ப்பை சரிக்கட்டுகிறவர்களாக இருக்கக்கூடாது. யூதாசும்பேதுருவும் இயேசுவை எதிர்த்தார்கள். ஆனால் இயேசு இருவரோடும் அன்பாகவே இருந்தார். அவர்களை மீண்டுமாக தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு இயேசு தன்னுடைய அன்பாலே முயற்சி செய்தார். பேதுரு இதை சாதகமாக்கிகொண்டு மீண்டும் அந்த பணிக்கு வந்து விட்டார். நம்முடைய சில கிறிஸ்தவ நண்பர்கள் இப்படி பெருமையினாலும் மேட்டிமையினாலும் ஆண்டவரை விட்டு வெகு தூரம் போயிருக்கலாம். ஆனால் நாம் அவர்களுக்கு உடனே நியாயதீர்ப்பு செய்யாமல் அவர்கள் தேவனுடைய சித்தத்தை மீண்டுமாக செய்வதற்கு நாம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். (மத்தேயு 7:1-5)

சத்தியத்தினால் அநேக முறைகள் யூதாஸ் தன்னை சுத்திகரிப்பதற்கான வாய்ப்புகள் கிடைத்தது. அவன் மீண்டும் ஆண்டவரின் வேலைகளைச் செய்ய வாய்ப்புகள் கிடைத்தும் சாத்தானின் ஊழியக்காரனாக மாறிவிட்டான். “12 அப்போஸ்தலர்களையும் பரலோகத்தின் தந்தை எனக்கு கொடுத்தார். அதில் ஒருவனாகிய “கேட்டின்

மகனைத் தவிர" ஒருவரும் கெட்டு போகவில்லை. அவன் இந்த உலகத்தில் பிறவாமல் இருந்தால் நலமாக இருக்கும்" என்றார். (முத்தேயு 26:24,யோவான் 6:70) இயேசுவின் மேல் விசுவாசமுள்ள ஊழியக்காரனாக இருக்கும் தகுதியை இழந்துவிட்டான். அவன் முடிவு பரியந்தம் நிலைத்திராமல் போனதினால் மேசியா அந்த மகத்துவமான இடத்திற்கு வேறொருவரை தெரிந்துகொண்டார்.





## பாடம் 12

### காட்டிக் கொடுத்த யூதாசுக்குப் பதிலாகத் தேர்வு செய்யப்பட்டவர்.

ஆண்டவராம் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு பதினொரு அப்போஸ்தலரோடு கூட 120 பேர் எருசலேமில் ஒரு மேல் வீட்டில் அமர்ந்திருந்தார்கள். வாக்குதத்தம் செய்யப்பட்டிருந்த பரிசுத்த ஆவிக்காகக் காத்திருந்தார்கள். (அப்போஸ்தலர் 1:4-15) அப்போது பேதுரு யூதாஸைக் குறித்த தீர்க்கதரிசனத்தை சங்கீதங்களின் புத்தகத்தில் நினைவு கூர்ந்தார். "அவனுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது, ஒருவனும் அதில் வாசம்பண்ணாதிருப்பானாக என்றும் "அவனுடைய கண்காணிப்பை வேறொருவர் பெறக்கடவன் என்று எழுதியிருக்கிறது". (அப்போஸ்தலர் 1:20) ஆகவே யூதாசுக்கு பதிலாக விசுவாசமுள்ள ஒருவரை நாம் தேர்வு செய்ய வேண்டும் என்று பேதுரு துரிதப்படுத்தினார்.

இயேசுவுடன் வாழ்ந்து அவருடைய உயிர்த்தெழுதலை தரிசித்தவர்களே இந்த இடத்திற்குப் பாத்திரவானாக இருக்க முடியும் என்று எண்ணி இரண்டு பேரைத் தேர்ந்தெடுத்தார்கள். மத்தியாவையும் யுஸ்துவையும் கொண்டு வந்து தேவனிடம் ஜெபித்தார்கள். இதில் தேவன் யாரைத் தெரிந்து கொள்ளுவார் என்று அறிந்து கொள்ளுவதற்குச் சீட்டுப் போட்டார்கள். சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது. அவர் யூதாசுக்குப் பதிலாகத் சேர்த்துக் கொள்ளப்பட்டார். (அப்போஸ்தலர் 1:21-26).

மத்தியாஸ் ஒரு சிறந்த மாதிரியாக இருந்திருக்க வேண்டும். அவர் ஒரு யூதனாக இருந்தார். பரலோக அழைப்பு புறஜாதிகளுக்கு இன்னும் கொடுக்கப்படவில்லை. இவர் ஒரு விசுவாசமுள்ள யூத

குடும்பத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். அவருடைய பேருக்கு. "யேகோவா தேவனின் பரிசு" என்று பொருள். அவர் யோவான் ஸ்நானகனின் சீஷனாக இருப்பதற்கு அநேக வாய்ப்புகள் இருக்கிறத. இதையும் ஓர் தகுதியாகப் பேதுரு எண்ணினார். (அப்போஸ்தலர் 1:21,22). பரிசுத்த ஆவியை கொடுத்து போதிப்பதற்கு இயேசுவால் அனுப்பப்பட்ட 70 சீஷர்களில் இவர் ஒருவராக இருந்திருக்க வேண்டும். (லூக்கா 10:1) நிச்சயமாக இந்த மகிமையான இடத்தைப் பெறுதவற்கு மத்தியாஸ் தகுதி பெற்றவராக இருந்திருக்க வேண்டும்.

மத்தியாஸ் ஒரு நல்ல கிறிஸ்தவனுக்கு எடுத்து காட்டாக இருந்தாலும், அப்போஸ்தலர்கள் தேவனுடைய சித்தத்திற்கு தங்களை முழுமையாக ஒப்புக்கொடுத்திருந்தாலும், அநேக முறை ஆண்டவருக்கு முந்தி செயல்பட ஆரம்பித்தார்கள். இயேசு அவர்களைப் பரிசுத்த ஆவியைப் பெறுவதற்குகாத்திருக்கச் சொன்னார். இதை மாத்திரம் தான் இவர்கள் செய்திருக்க வேண்டும். யூதாசுக்குப் பதிலாகப் வேறு ஒரு ஆளை தேர்வு செய்தவற்கான கட்டளை இவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியை முழுமையாக பெறாததினால் அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யத் துணிந்தார்கள். இப்படியாக அநேக பாடங்கள் மூலமாக பேதுரு ஒவ்வொரு காரியத்திலும் எப்படி நடக்க வேண்டும் என்ற அறிவைப் பெற்றார். ஆகவே எந்தக் காரியத்திலும் தேவனுடைய அனுமதி இல்லாமல் நாம் செயல்படுவது மிகத் தவறாகும். மிக எச்சரிப்பாக தேவனுடைய சித்தத்திற்காக காத்திருக்க வேண்டும். பரலோகத்தின் பிதா இவர்களுடைய நல்ல நோக்கத்தை அறிந்து இவர்களுடைய குற்றங்கள் அனைத்தையும் மன்னித்துக் கொண்டே வந்தார். அவருடைய நீடிய பொறுமையால் எல்லா சீஷர்களுக்கும் சுய சித்தத்தைச் செய்யும் எந்தக் காரியமும் ஆவிக்குறியதாக இராதென்றும், தேவனுடைய சித்தத்தை அறிந்து நடப்பதே நித்தியமாக இருக்கும் என்று தேவன் அவர்களுக்குப் புரியவைத்தார்.

பிதாவாகிய தேவன் மற்றொரு திட்டத்தையும் வைத்திருந்தார். அவருக்கேற்ற கருவியாக சவுலை ஆயத்தம் செய்து வந்தார். ஆனால் ஒருபோதும் அப்போஸ்தலர்கள் சவுலை தேர்ந்தெடுத்த திருக்க

மாட்டார்கள். ஸ்தேவானைக் கல்லெறிந்து கொன்றது முதல் சபையைத் துன்பப்படுத்துபவர் என்று சவுலைப் பற்றி அனைவரும் அறிந்திருந்தார்கள். (அப்போஸ்தலர் 7:57-60) ஆனால் பிதாவாகிய தேவன் ஆதிகால சபைக்கு தவறான வழியில் பக்தி வைராக்கியம் கொண்டிருந்த சவுலை அவருடைய தூய ஆவியின் மூலம் அப்போஸ்தலர்களில் ஒரு சிறந்த சீஷனாக அவரை மாற்றிக் காட்டினார். (1கொரிந்தியர் 1:26-29) (11கொரிந்தியர் 11:5) பவுலின் விசுவாசத்தைப் பற்றி நாம் வசனங்கள் மூலமாக அநேக காரியங்களை அறிந்து கொள்ளலாம். அவருடைய வாழ்க்கையில் நடந்த மாற்றங்களையும், இன்னும் மற்ற அநேக காரியங்களையும் நாம் அடுத்த பாடத்தில் பார்க்கலாம்.

மத்தியாவுக்கு என்ன நடந்தது? தேவன் தன்னை தேர்வு செய்யவில்லை என்பதனால் அவர் கோபம் அடைந்து தர்க்கங்கள் செய்து செய்து அந்த உரிமைக்காகப் போராடினாரா? அது அவரால் முடியவில்லை என்பதற்காக மந்தையை விட்டுப் போய்விட்டாரா? ஆனால் அப்படிப்பட்ட காரியங்கள் ஏதும் நடக்கவில்லை. அவர் சுவிசேஷப் பணியை மிக உற்சாகத்தோடு செய்தார் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். எல்லா கிறிஸ்தவர்களும் இதிலிருந்தும் பாடத்தை கற்றுக்கொள்ள வேண்டும். தேவன் மற்றவர்களுக்கு கொடுக்கும் வரத்தைப் பார்த்து பொறாமைப்படாமல் சந்தோஷப்பட வேண்டிய வர்களாக இருக்க வேண்டும். (1 கொரிந்தியர் 13:4)



மத்தியாஸ் சுவிசேஷத்தை அர்மேனியா, எத்தியோப்பியா போன்ற இடங்களில் போதித்ததாகவும், அங்கே அவர் குருடாக்கப்பட்டு சிறையில் இருந்த போது, அந்திரேயா அவரைக் காப்பாற்றி எருசலேமுக்குக் கொண்டு வந்தார். பின்பு சுவிசேஷத்தின் நிமித்தமாக கல்லெறியப்பட்டார் என்று வரலாறு கூறுகிறது.

பெந்தெகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியைப் பெற்ற 120

பேர்களில் மத்தியாசும், யுஸ்தும் இருந்தார்கள். ஆகவே மற்ற 11 அப்போஸ்தலர்களும் அவர்களுக்கு ஏற்ற அன்பையும் கனத்தையும் கொடுத்திருக்க வேண்டும். அதுபோல் இவர்கள் இருவரையும் இயேசுவின் விசுவாசமுள்ள சீடர்களாக ஏற்றுக்கொள்ளலாம்.





## பாடம் 13

# அப்போஸ்தலனாகிய பவுல்

இவர் யூதாசுக்குப் பதிலாக தேவனால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். தேவன் இவருக்கு கொடுத்த அற்புதமான அனுபவங்களையும், ஆசீர்வாதங்களையும் நாம் காணும் போது, இவை எல்லாவற்றையும் கீழ்ப்படியாமையினாலும், அவிசுவாசத்தினாலும் யூதாஸ் இழந்து விட்டான் என்பதை நாம் நினைக்கும் போது, வேதனையாக இருக்கிறது. தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் ஆசீர்வாதங்களைத் தொடர்ந்து விரயம் செய்து கொண்டிருந்தால் அவர் அதை எடுத்து தகுதியுள்ள வேறொருவருக்குக் கொடுத்து விடுவார் என்று இந்தப் பாடத்தில் நாம் கற்றுக்கொள்கிறோம். (மத்தேயு 25:28) லூக்கா 19:24)

பவுல் சிலிசியா நாட்டைச் சேர்ந்த சவுல் என்று அழைக்கப்பட்டார். அவருடைய தந்தை ஐசுவரியமுள்ள ஒரு ரோமப் பிரஜையாக இருந்தார். பவுல் என்ற பெயர் ரோமாபுரியில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. அவருடைய குடும்பம் ஒரு பக்தியான யூத குடும்பமாக இருந்தது. இவர்கள் பரிசேயர்களாக இருந்தார்கள். சவுல் அதிகமான கல்வி கற்றவராக இருந்தார். பணக்காரர்கள் படிக்கும் பள்ளிக்கூடத்தில் பயிற்சி பெற்று வந்தார். இவர் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி அடைந்திருந்தார். வசதியானவராகவும், படித்தவராகவும் வேதத்தில் தேறினவராகவும், மற்றவர்களால் மதிக்கப்படதக்கவருமாக இருந்தார். (அப்போஸ்தலர் 22:3)

சவுல் ஒரு விசுவாசமுள்ள யூதனாக இருந்ததினால் தேவனை பக்தியோடும் அன்போடும் சேவித்து வந்தார். அவர் வைராக்கியம்

கொண்டிருந்தாலும் தேவனுக்கேற்ற பக்தியில் அவர் வைராக்கியம் கொள்ளவில்லை. (ரோமர் 10:2,3) கிறிஸ்தவ யூதர்களை துன்பப்படுத்துவது தேவனுக்குப் பிரியமுள்ள காரியம் என்று எண்ணினார். ஸ்தேவானை கல்லெறிந்துக் கொல்லும்படி கட்டளை கொடுத்தவர் இந்த சவுல் தான்.

இந்தப் பணியில் கடைசியாக அவர் செய்த காரியம், தமஸ்குவில் உள்ள கிறிஸ்தவர்களைச் சிறைபிடிப்பதற்கு எருசலேமில் கடிதங்களை வாங்கி கொண்டு சென்றார். அவர் ஒரு கூட்டத்தோடு சென்றார். ஆனால் வழியில் அவருடைய வாழ்க்கை நித்தியமாக மாறத்தக்கதான ஒரு அதிர்ச்சி தரக்கூடிய அற்புதமான அனுபவத்தை அவர் பெற்றார். மத்தியான வேளையில் சூரியனை விட பிரகாசமான ஒரு வெளிச்சம் பிரகாசித்தது. சவுல் கீழே விழுந்தார். “சவுலே சவுலே நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்?” என்ற சத்தம் கேட்டது. “ஆண்டவரே நீர் யார்?” என்று சவுல் கேட்டார். அதற்கு “நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே” என்றார். “ஆண்டவரே இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்” என்று சவுல் கேட்டார். ” அதற்கு இயேசு “எழுந்து பட்டணத்திற்குள் போ, அங்கே நீ செய்ய வேண்டியது உனக்கு அறிவிக்கப்படும்.” என்றார். இயேசுவின் மகிமையான ஒளியையும் கண்டார். இயேசு மக்கள் பயந்துவிடக் கூடாது என்று மற்றவர்களுக்கு அநேக மனித ரூபத்தில் தோற்றம் அளித்தார். சவுலுடன் சென்ற மற்றவர்கள் அவர் மகிமையைக் காணவில்லை.



அந்த வெளிச்சம் சவுலின் கண்களைக் குருடாக்கிவிட்டது. ஆனால் அவருடைய மனக்கண் திறக்கப்பட்டது. இயேசுவைப் பின்பற்றக்

கூடியவர்களைத் துன்பப்படுத்துவது இயேசுவை துன்பப்படுத்துவதாக இருப்பதால், ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறீர் என்று இயேசு சவுலிடம் கேட்டார். இப்படிப்பட்ட ஒரு மனுஷனிடம் இயேசு ஏன் பேசினார்? அப்போஸ்தலர்களின் விருப்பத்தின்படி மத்தியாஸை தேர்ந்தெடுத்திருக்கலாமே. தேவன் சவுலின் மூலமாக ஒரு அருமையான எடுத்துக்காட்டை நமக்கு வைத்திருக்கிறார். மனுஷரால் வெறுக்கப்பட்ட ஒருவரை தேவனால் இரக்கமுள்ளவராகவும், அன்பு மிகுந்தவராகவும் மாற்ற முடியும் என்று நிரூபித்து விட்டார். (1 கொரிந்தியர் 1:26-29) இப்படிப்பட்ட தேவனுடைய பெரிதான காரியத்திற்காக ஒரு மனுஷனை பிறப்பிலிருந்தே தேவன் ஆயத்தப்படுத்துவார். (கலாத்தியர் 1:15).



சவுல் பிறப்பதற்கு முன்னமே அவருடைய குடும்பம் வசதியாகவும் பக்தியாகவும் படிப்பறிவுள்ளவர்களாகவும் இருந்தது. அவருடைய தகப்பன் ஒரு பரிசேயனாக இருந்தார். ஆகவே சவுலும் ஒரு பரிசேயனாக இருந்தார். இவர்கள் தேவனுடைய சட்டதிட்டங்களைப் பற்றி மற்றவர்களை விட நன்கு அறிந்திருந்தார்கள். இந்த ஒரு தகுதி சுவிசேஷத்தை எல்லா இடங்களிலும் யூதர்களுக்குப் போதிப்பதற்கு ஏற்றதாக இருந்தது. ஆனால் சவுல் எல்லாவற்றையும் விட்டு விட்டு, இயேசுவைப் பின்பற்ற வேண்டியதாக இருந்தது. அதை சவுல் செய்யாமல் இருந்தால் தேவன் இவர் மூலமாக அவருடைய சித்தத்தை செயல்படுத்தியிருக்கமாட்டார். சவுல் தானே இதை தெரிந்து கொண்டதினாலே தேவன் அதை அவருக்கென்று உபயோகப்படுத்திக்கொண்டார். (அப்போஸ்தலர் 9:1-8)

சவுலுடன் கூட சென்றவர்களின் உதவியால் தமஸ்குவுக்கு சென்றார். அங்கு அவர் உபவாசித்து ஜெபித்துக்கொண்டிருந்தார். “நான் என் பார்வையை இழந்து விட்டேன்” என்று ஒருபோதும் அவர்

கவலைப்படவில்லை ஆண்டவரின் வழி நடத்துதலுக்காக காத்திருந்தார். அங்கு இருந்த போது அனனியா என்ற சீஷன் வந்து அவருக்குப் பார்வை கொடுப்பதாக தரிசனம் கண்டார். அதே சமயம் இயேசுவின் மேல் விசுவாசமுள்ள அனனியா என்னும் ஒரு சீஷன் தரிசனம் கண்டார். "அனனியாவே நீ எழுந்து யூதாவின் வீட்டுக்கு போய், அங்கு சவுல் என்பவன் ஜெபித்துக் கொண்டிருக்கிறார். அவர்ப் பார்வை அடையும்படி செய்" என்றார். ஆனால் ஆரம்பத்தில் அனனியா மறுத்துவிட்டார். இவர் எருசலேமில் உள்ள பரிசுத்தவான்களைத் துன்பப்படுத்தினாரே என்றார். அதற்கு அவர், "நீ போ நான் அவனை புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி தெரிந்துகொண்ட பாத்திரமாக இருக்கிறான், என் நாமத்தின் நிமித்தம் அவர் பட வேண்டிய பாடுகளை நான் அவனுக்கு காண்பிப்பேன்" என்றார் அதற்கு ஆண்டவர் சொன்னதை அனனியா செய்தார். அவர் நேரே சவுலிடம் சென்று அவர் மேல் கைகளை வைத்து, சகோதரனாகிய சவுலே, ஆண்டவராம் இயேசு உமக்கு பார்வை அடையும் படியாகவும், முழுமையாக பரிசுத்த ஆவியால் உம்மை நிரப்புவதற்கும் என்னை அனுப்பினார் என்றார். அப்போது மீன் செதிள்கள் போன்றவைகள் அவர் கண்களில் இருந்து விழுந்தது. மீண்டுமாக ஓர் அளவுக்கு அவர் பார்வை அடைந்தார். அதற்கு பின்பு அவர் எழுந்து ஞானஸ்நானம் பெற்று தாமதமின்றி போதிக்கத் தொடங்கினார். (அப்போஸ்தலர் 9:10-20)

சவுல் உடனடியாக தமஸ்குவில் இயேசு தேவனுடைய குமாரன் என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். கிறிஸ்தவர்களை என்ன நோக்கத்திற்காக துன்பப்படுத்தினாரோ அதே காரியத்தை இவர் செய்தது அனைவருக்கும் வியப்பாக இருந்தது. தமஸ்குவில் இருக்கும் பிரதான ஆசாரியன் சவுலை வெறுக்க ஆரம்பித்தான். அவரைக் கொலை செய்யவும் திட்டமிட்டான். ஆனால் அங்கு இருந்த கிறிஸ்தவர்கள் சவுலைக் காப்பாற்றி திரும்ப எருசலேமுக்கு அனுப்பினார்கள்.

எருசலேமை சேர்ந்தச் சவுல் அங்கு இருந்த கிறிஸ்தவர்களோடு இணைந்து செயல்பட நினைக்கும் போது மற்ற கிறிஸ்தவர்கள்

பயந்தார்கள். ஸ்தேவானைக் கொலை செய்ய உத்தரவு கொடுத்தவர் இவர் தான் என்று அனைவருக்கும் தெரிந்திருந்தது. ஆகவே தேவன் பர்னபாவை சவுலோடு ஊழியத்திற்கு நியமித்தார். ஒவ்வொருவருக்கும் சவுலின் வாழ்க்கையில் நடந்த காரியங்களை பர்னபா எடுத்துரைத்தார். அவர் கிறிஸ்துவின் நிமித்தம் அநேக துன்பங்களைப் பட துணிந்திருக்கிறார் என்று அவர் அறிவித்தார். அதற்குப் பின்பு எருசலேமில் உள்ள கிறிஸ்தவர்கள் சவுலை வரவேற்றார்கள் அனைவரும் தேவனுடைய சர்வவல்லமையை உணர்ந்தார்கள்.

சவுலின் சம்பாஷணைகளையும், போதனைகளையும் அவருடைய குடுமபத்தினரும் நண்பர்களும் கேட்டு, எத்தனை ஆச்சரியப்பட்டிருப்பார்கள் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். தேவனுடைய வல்லமையை சாத்தானுடைய வல்லமை மேற்கொண்டது என்று நினைத்தார்கள். இஸ்ரயேல் தேசத்திற்கு எவ்வளவு பெரிய கலங்கம் என்று நினைத்து சவுலின் குடும்பத்தினர் அவரைத் துன்பப்படுத்தித் தொடங்கினார்கள்.

ஐசுவரியம் உள்ள ஒரு பரிசேயன் மனம் மாறி தங்களை விட்டு விலகி விட்டார் என்று எண்ணினார்கள். வீட்டிலும், நாட்டிலும் எந்த விதமான கனத்தையும் அதற்குப் பிறகு அவர் பெறவில்லை. அவர் ஐசுவரியவானாக இருந்தும் கிறிஸ்துவின் நிமித்தம் தரித்திரன் ஆனார். (அப்போஸ்தலர் 9:19-30)

சவுல் எந்தச் சூழ்நிலையிலும், சோதனையிலும் அவருடைய பக்தி வைராக்கியம் குறைவுபடவே இல்லை. அதற்குப் பின்பு அவர் அரபு தேசத்திற்குச் சென்று அநேக தீர்க்கதரிசனங்களைக் கற்றுக் கொண்டார். மூன்று வருடம் அங்கு இருந்த பின்பு ஒரு முதிர்ச்சி அடைந்த கிறிஸ்தவனாக திரும்பினார். ஞானத்திலும் தேவ ஆவியிலும் நிரப்பப்பட்டார். இயேசுவோடு வாழ்ந்த மற்ற அப்போஸ்தலர்களைப் போல இவரும் தெளிவாக தேவ திட்டத்தை அறிந்தார். ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் தேவனுடைய திட்டத்தை அறிவது மிக அவசியமாக இருக்கிறது. (11 தீமோத்தேயு 2:15)



இப்பொழுது பவுல் ஊழியத்தை தொடங்கும் நேரம் வந்தது. தேவன் சவுலுக்கு உதவியாக பர்னபாவை கொடுத்தார். பர்னபா ஒரு லேவியனாக இருந்தார். இவர் கிறிஸ்தவனாக மாறினவர் . புறஜாதியாரின் தீவாகிய சீப்புருவில் இருந்து வந்தார். அந்தியோகியாவில் தேவனுடைய வார்த்தைகளைக் புரிந்துகொள்ளுவதற்கு ஆவலோடு இருந்தார்கள் என்று பர்னபா அறிந்து சவுலை அங்கு அழைத்துச் சென்று அங்குள்ள புறஜாதிகளை பலப்படுத்தினார். நான் புறஜாதிகளுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும் படி தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரம் என்று சவுலின் தரிசனத்தில் அவருக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை பர்னபா நினைவில் வைத்திருந்தார். பர்னபா என்பதற்கு “ஆறுதலின் மகன்” என்று அர்த்தம். ஒவ்வொரு சூழ்நிலையிலும் பர்னபா மற்ற சகோதரர்களுக்கு ஆறுதல் அளித்து வந்தார். அவர் புறஜாதி நாடுகளில் இருந்து வந்ததால் புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதில் மிகவும் வாஞ்சையுள்ளவராக இருந்தார். அநேக புறஜாதி நண்பர்கள் இவர் மூலமாக சத்தியத்தை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.



அந்தியோகியாவில் புதிய கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் பெலப்படும் வரைக்கும் ஒரு வருடம் சவுலும் பர்னபாவும் அங்கே தங்கியிருந்தார்கள். அங்கிருந்த சகோதரர்கள், பல நாடுகளுக்கும், மற்ற இடங்களிலும் சபைகளை ஸ்தாபிப்பதற்கு அவர்களை அங்கிருந்து

அனுப்பிவிட்டார்கள். இப்படியாகப் பவுலும் பர்னபாவும் புறஜாதிகளின் நாடுகளுக்குள் பிரயாணமாககச் சென்று சுவிசேஷத்தை யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் அறிவித்தார்கள், புறஜாதிகள் மத்தியில் பவுல் என்ற பெயர் அடிக்கடி வழங்கப்பட்டதால் அவரை பவுல் என்று அழைத்து வந்தார்கள். யூதர்கள் அல்லாத புறஜாதிகள் அநேக விக்கிரகங்களை வணங்கி வந்தார்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தைகளையும் பிரமாணங்களையும் தீர்க்கதரிசனங்களையும் அறியாதிருந்தார்கள். ஆகவே அவர்களுக்கு சுவிசேஷத்தை வேறு விதத்தில் போதிக்க வேண்டியதாக இருந்தது. பவுலும் பர்னபாவும் பரிசுத்த ஆவியின் பெலத்தால் வியாதியஸ்தரைக் குணப்படுத்தி சத்தியத்தைக் கேட்கும்படி செய்தார்கள். லீஸ்தீரியா என்ற புறஜாதி பட்டணத்தில் இவ்விருவருடைய பிரசங்கத்தைக் கேட்டு இவர்கள் தங்களுடைய தெய்வங்களாகிய மெர்க்குரி, யூபித்தர் என்று முடிவு செய்தார்கள். இவர்களுக்குப் பலி பொருட்களைக் கொண்டுவந்துப் பலி செலுத்தி இவர்களைத் தொழுது கொண்டு புகழ்ந்தார்கள். பவுலும் பர்னபாவும் அவர்கள் மத்தியில் சென்று அவர்கள் செய்வது தவறு என்று சொன்னார்கள். தாங்கள் சாதாரண மனிதர்கள் என்று எவ்வளவோ எடுத்துச் சொன்னார்கள். சிலர் அங்கு விசுவாசிகளாகவும் மாறினார்கள். அதற்கு பின்பு சில யூதர்கள் அந்தப் பட்டணத்தில் நுழைந்து பவுலுக்கும் பர்னபாவுக்கும் எதிராகப் பிரசங்கித்து அனைவரும் அவர்களை கல் எறிந்து துரத்தி வெளியே எறிந்து விட்டார்கள். அவர்களை காட்டு மிருகங்களுக்கு இரையாக விட்டு விட்டார்கள். அந்த நாட்டில் இருந்த சில விசுவாசிகள் அவர்களுடைய காயங்களை ஆற்றி குணப்படுத்தினார்கள். அங்கியிருந்த புதிய விசுவாசிகளின் உதவியால் சீக்கிரமாக அந்த இடத்திலிருந்து புறப்பட்டார்கள். (அப்போஸ்தலர் 14:6-22)

யூதர்களுக்குச் சுவிசேஷத்தைப் போதிக்கும் போது வேறு விதத்தில் பிரசங்கித்தார்கள். அவர்கள் மேசியாவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்கள். இதற்கான தீர்க்க தரிசனங்களையும் அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். பொதுக்கூட்டங்களில் சம்பாஷிப்பதற்கு இவர்கள் போய் அமருவார்கள்.

இவர்களுடைய முறை வரும் போது இயேசுவைப் பற்றிய பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை எடுத்துரைப்பார்கள். சில யூதர்கள் இயேசுவை மேசியா என்று ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் அநேக முறை பிரதான ஆசாரியர்கள் மிகவும் கோபமடைந்து அவர்களை அடித்து கல்லெறிந்தார்கள் சில நேரங்களில் இந்தப் பிரதான ஆசாரியர்கள் ரோம அதிகாரிகளிடம் சென்று, இவர்களைச் சிறையில் அடைக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். இப்படி இவர்கள் சிறைக்குள் செல்லும் போது ராஜாக்களைச் சந்தித்து சுவிசேஷத்தை அறிவிக்க வாய்ப்புகள் கிடைத்தது. அப்போஸ்தலனாகிய பவுல் அநேக வருடங்கள் சிறையில் இருந்தார். ஒரு முறை அகரிப்பா ராஜாவிடம் சாட்சி கொடுத்தார். (அப்போஸ்தலர் 23:23-35,24:26) ஆண்டவர் அனனியாவிடம் சொன்ன சகல தீர்க்கதரிசனங்களும் நிறைவேறியது. "புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரயேல் மக்களுக்காகவும் சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக தெரிந்துகொண்ட பாத்திரமாக இருக்கிறார்."

பவுலும் பர்னபாவின் பிரயாணங்களில் புறஜாதிகளைப் பற்றிய கருத்து வேறுபாடுகள் உண்டாயிற்று. சில யூத கிறிஸ்தவர்கள் புறஜாதி கிறிஸ்தவர்களை விட தங்களை மேன்மையுள்ளவர்கள் என்று எண்ணினார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களாக மாறின போது சில யூத சடங்குகளை கடைபிடிக்க வேண்டும் என்று போதித்தார்கள். ஆகவே இந்த சட்டங்களை புறஜாதி கிறிஸ்தவர்களும் கடைபிடிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்கள். ஆனால் இதை குறித்து பவுல் மிக தெளிவாக போதித்தார். (கொலோசியர் 2:14) எல்லா சட்டங்களையும் இயேசு தன்னுடைய சிலுவை மரணத்தில் நிறைவேற்றினார் என்று தெளிவாகப் புரிய வைத்தார். இந்த சட்டங்கள் அனைத்தும் யூதர்களை இந்நாள் மட்டும் அடிமையாக வைத்திருந்தது என்றும் இயேசு சகல அடிமைத்தனத்தில் இருந்து நம்மை விடுதலையாக்கினார் என்றும் போதித்தார். நாம் மீண்டுமாக சட்டத்திற்கு கீழ்ப்படிந்தோம் என்றால், அந்த அடிமைத்தனத்திற்கு மீண்டும் உள்ளாகி விடுவோம் என்றார்.

இதற்கான ஒரு எடுத்துக்காட்டை பார்க்கலாம். ஒரு கடையில் விலையுயர்ந்த பொருள் ஒன்றை உடைத்து விட்ட பின்பு அதற்காக

வாழ்நாள் முழுவதும் தினமும் இரண்டு மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்று அந்த உரிமையாளர் சொல்லிவிடுகிறார். அதே போல் அந்தப் பொருளை உடைத்த நபரும் தினமும் வேலை செய்து கொண்டிருந்தார். ஒரு நல்ல குணமுள்ள பணக்கார மனிதன் இதைக் கண்டு அந்த கடனை தீர்த்து அடிமைப்பட்டிருக்கும் மனிதனை விடுதலை செய்தால், அந்த அடிமையாக இருந்தவன் எவ்வளவு மகிழ்ச்சி அடைவான். ஒரு வேளை ஒரு வாரம் சென்ற பிறகு அவன் மீண்டுமாக அந்த வேலைக்குத் திரும்பினால் அவன் எவ்வளவு பெரிய முட்டாளாக இருக்க வேண்டும்.

இப்படியாக கிறிஸ்தவர்கள் மீண்டுமாக யூத முறைமைகளைக் கடைப்பிடிப்பது முட்டாள் தனமாகவே இருக்கிறது. யூதர்கள் அல்லாத புறஜாதியார்கள் பாவத்திலும் மரணத்திலும் அடிமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இஸ்ரேயலர்கள் இப்படி பாவத்தில் இருந்தாலும் பாவத்தில் வாழும் மனிதன் பூரணப்படுவது இயலாத காரியம் என்று இவர்களைக் கொண்டு தேவன் வலியுறுத்தினார். அவர் பூரணமான சட்டத்தைக் கொடுத்து கீழ்படியும் படி சொன்னார். இதை நீங்கள் கீழ்படிந்தால் நித்தியமாக வாழலாம் அல்லது கீழ்ப்படியாமல் போனால் மரித்து போவீர்கள் என்றார். அவர்கள் அனைவரும் ஒரே மனதாக ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் அவர்களால் அதைக் கடைபிடிக்கமுடிய வில்லை. ஆகவே இயேசு இந்த சட்டங்களை முழுமையாக கடைபிடித்தார். அவர் பூரண மனிதனாக இருந்ததினால் அதை அவரால் கடைபிடிக்க முடிந்தது. தேவன் வாக்களித்தபடியே அவர் நித்தியமாக வாழ்வதற்குத் தகுதி பெற்றார். இயேசு இந்த மனுக்குலத்திற்கு உதவ வேண்டும் என்று தன்னுடைய ஜீவனை இந்த மனுக்குலத்திற்காகக் கொடுத்தார். ஆகவே இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்ட யூத கிறிஸ்தவர்கள் அனைவரும் நியாயப்பிரமாணம் என்ற அடிமைத்தனத்தின் கீழ் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள்? அநேக யூத மத சட்டங்களை புறஜாதி கிறிஸ்தவர்களை கடைபிடிக்கும்படி கட்டாயப்படுத்தினார்கள். சில சூழ்நிலைகளில் பேதுருவும் பர்னபாவுமே இப்படிப் போதித்தார்கள். இதைக்கேட்ட யூத கிறிஸ்தவர்கள் பவுலைச்

சந்தேகப்பட ஆரம்பித்தார்கள். பவுல் உண்மையான தேவ ஆவியை பெற்று தேவ ஞானத்தில் போதிக்கிறாரா, இல்லையா என்ற கேள்வி எழும்பியது. அந்தியோகியாவில் உள்ள சபையில் பேதுரு யூத கிறிஸ்தவர்களை விட புறஜாதி கிறிஸ்தவர்களை சற்று குறைவாக எண்ணினார். இதைக் கண்ட அப்போஸ்தலனாகிய பவுல் மிகவும் கோபம் அடைந்தார். பேதுருவை நேரடியாக எதிர்த்து கடிந்து கொண்டு சத்தியத்தைக் கூறி புத்தி சொன்னார். இயேசு எல்லா சட்டங்களையும் நிறைவேற்றியதால் கிறிஸ்துவுக்குள் அனைவரும் ஒன்றாக இருக்கிறார்கள் என்றார். ஆகவே ஒருவரை விட ஒருவர் மேலானவர்கள் அல்ல என்றார். நாம் ஒருவரோடு ஒருவர் அன்பாக இருக்க வேண்டும். விசேஷமாக விசுவாச வீட்டாரோடு அன்போடு செயல்பட வேண்டும். (கலாத்தியர் 6:10)

ஆனாலும் அப்போஸ்தலனாகிய பவுலின் அயராத உழைப்பும் அன்பும் மீண்டுமாக அனைத்து சபைகளும் அதில் உள்ள கிறிஸ்தவர்களும் அவரை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் சில ஆட்டுத் தோல் போர்த்திய ஓநாய்கள் அங்கு இருந்தார்கள். இவர்களைக் குறித்து பவுல் சபைகளை எச்சரித்துக்கொண்டிருந்தார். ஆனால் தேவன் இப்படிக் கள்ளப் போதனைகளை சபைக்குள் அனுமதித்தார், ஏனெனில் மற்றவர்களைச் சோதிக்கும் படி அப்படிச் செய்தார். தேவன் மேல் உண்மையான அன்பு கொண்டவர்கள் சத்தியத்தில் விசுவாசத்தோடு நின்றார்கள்.

மீண்டுமாக பேதுருவும், பர்னபாவும், பவுலுடன் தங்களுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகளைச் சரி செய்து விட்டு பவுலோடு ஒருமனப்பாட்டுடன் இயேசுவைப் பற்றி சுவிசேஷத்தை போதிக்க ஆரம்பித்தார். மரணத்தின் அடிமைத் தனத்தில் இருந்து நம்மை விடுவிக்க இயேசு மரித்தார் என்றும் இன்னும் அநேக காரியங்களை பிரசங்கிக்கத் தொடங்கினார்கள். (அப்போஸ்தலர் 15:7-12,22,25) இந்த அப்போஸ்தலர்கள் ஆதிகால சபையில் விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்கு அதிகமாக முயற்சி செய்தவர்கள். ஆகவே பவுல் மிகத் தெளிவாக பேதுருவுக்கு சில காரியங்களைக் குறித்து போதித்தார்.

நாமும் இப்படிப்பட்ட தப்பான போதனைகளுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பூந்தோட்டத்தில் களைகளை நடுவதை போல் ஆகிவிடும். நாம் தூய்மையான சத்தியத்தில் நிலைத்துநிற்க கவனமாக இருக்க வேண்டும். ஆகவே நம்மை ஞானமாக வழிநடத்தக்கூடிய மூப்பர்களை கனப்படுத்த வேண்டும்.



அப்போஸ்தலனாகிய பவுல் அநேக முக்கியமான போதகங்களைக் குறித்தும் நியாயப்பிரமாணத்தைக் குறித்தும் புரிந்துகொள்ளுதலுக்கான கண்களை திறந்தார். அவர் நியாயப்பிரமாணங்கள் கொடுக்கப்பட்ட நோக்கத்தைக் குறித்து போதித்து வந்தார். இயேசுவை இருதயத்தில் மேசியாவாக ஏற்றுக்கொள்ளுவதே நியாயப்பிரமாணத்தின் நோக்கமாக இருக்கிறது என்று அறிவித்தார் நியாயப்பிரமாணம் நம்மை இயேசுவிடம் வழி நடத்தும் உபாத்தியாய் இருக்கிறது. (கலாத்தியர் 3:24) எபிரெயர்களுக்கு எழுதின முழு நிருபமும் யூதர்களின் ஆசரிப்புக் கூடாரத்தின் விளக்கமாக இருக்கிறது.

அங்கு செலுத்தப்பட்ட மிருகங்களின் பலிகள் அனைத்தும் இயேசு இந்த உலகத்தின் மனுக்குலத்திற்குத் தன்னுடைய ஜீவனைக் கொடுத்ததை அடையாளப்படுத்தக்கூடிய விதத்தை எடுத்துக் காட்டினார். இந்த நிருபத்திலும் இன்னும் அநேக நிருபங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட பஸ்கா ஆடு, நம்முடைய ஆண்டவராகிய இயேசு என்பதை அவர் வலியுறுத்தி இருக்கிறார். இப்படிப்பட்ட அருமையான சத்தியங்கள் அப்போஸ்தலனாகிய பவுலின் விசுவாசத்தின் மூலம் சகல சபைகளிலும் கிறிஸ்தவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது.

பவுலின் பக்தி வைராக்கியத்தைப் பாராட்டத் தக்கதாக அவர் இயேசுவின் நிமித்தம் தன்னுடைய குடும்பம், நண்பர்கள், ஆஸ்தி,

உடல்நலம், வசதிகள் அனைத்தையும் இழந்து விட்டார். அவர் குறைவாக இருந்ததைக் குறித்து என்றைக்கும் வருத்தப்பட்டதே இல்லை. தன்னுடைய தேவைக்காக அவர் கூடாரத் தொழிலைச் செய்தார். (அப்போஸ்தலர் 18:3) அவருடைய தேவைக்கு ஏற்ப சம்பாதித்து விட்டு பின்பு ஊர் ஊராகச் சென்று சத்தியத்தையும், தேவனுடைய திட்டத்தையும் போதித்தார். அவர் ஒருபோதும் சகோதரர்களிடம் தன்னுடைய தேவைகளுக்காகப் பணம் கேட்டதில்லை. தேவன் அவருடைய மகிமையினால் கிறிஸ்து இயேசுவின் மூலம் தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்வார் என்று அறிந்திருந்தார்.அவர் விசுவாசித்தது போல தேவன் ஆதி காலச் சபைகளில் உள்ளவர்கள் மூலமாக பவுலைப் பிழைப்பூட்டினார். அவர் எந்தச் சூழ்நிலையிலும் உலக காரியங்களில் சிக்கிக்கொள்ளவில்லை. உலக வேலைகளைச் செய்யக்கூடிய பொன்னான நேரங்களைத் தேவனுடைய பணிக்காக அவர் அர்ப்பணித்தார். அவர் பிலிப்பு பட்டணத்திற்கு கடிதம் எழுதும் போது நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன் என்கிறார். (பிலிப்பியர் 4:11,18)

அவர் தன்னுடைய உடல் பலவீனத்தைக் குறித்தும் திருப்தியாகவே இருந்தார். அவருடைய கண் பார்வை மிகவும் குறைவுள்ளதாக இருந்தாலும், "என் சரீரத்தில் கொடுக்கப்பட்ட முள்" என்று சொல்லி அதற்காக மூன்று முறை ஜெபித்தார். ஒருவேளை அவர் தன் உடல் நலம் பூரணமாகக் குணமடைந்தால் இன்னும் முழுமையாக தேவனுடைய வேலையைச் செய்யலாம் என்று எண்ணினார். அவர் வேண்டுதல் கேட்கப்படாமல் போனாலும், தேவனுடைய அன்பையும், இரக்கத்தையும் , பலத்தையும் அதிகமாக ருசிபார்த்தார் என்று (11 கொரிந்தியர் 11:18-31) வசனங்களில் எழுதப்பட்டுள்ளது. இதன் மூலமாக தேவன் சகல தேவைகளையும் பூர்த்தி செய்வார் என்று பவுல் விசுவாசித்தார். தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு மட்டும் தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டும் என்று, அறிந்து கொண்டார். (பிலிப்பியர் 4:19) சகல கிறிஸ்தவர்களும் இந்த விசுவாசத்தின் அடிப்படையில் ஜீவிக்க வேண்டும் என்பது நமக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையைக் குறித்து அனேக காரியங்கள் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் பவுலின் வாழ்க்கையில் உள்ள பாடங்களை எழுதுவதற்கு ஒரு அதிகாரம் போதாது. ஆகவே கொரிந்தியாவில் உள்ள சகோதரர்களுக்கு, அப்போஸ்தலனாகிய பவுல், தன்னுடைய

அனுபவங்களை மிகச் சுருக்கமாக எழுதியிருக்கிறார். ஒவ்வொரு அனுபவங்களிலும் தன்னுடைய சுயத்தை மறைத்து தேவனை மகிமைப்படுத்தினார். அவர் கிறிஸ்துவின் நிமித்தம் பட்ட பாடுகளுக்காக மிகவும் மகிழ்ச்சியடைந்தார். சபைகளை ஸ்தாபிப்பதற்கும், சுவிசேஷத்தை அறிவிப்பதற்கும் அவர் பட்ட பிரையாசங்கள் அளவிட முடியாதது. ஐந்து முறை 39 அடிகள் யூதர்களால் அடிக்கப்பட்டார். ஒரு முறை கல்லெறியப்பட்டார், மூன்று முறை மிலாரினால் அடிக்கப்பட்டார், மூன்று முறை கப்பல் சேதத்தில் அகப்பட்டார். திருடர்கள், சொந்த மக்கள், புறஜாதியார் மற்றும் கள்ளச் சகோதரர்களினால் துன்புறுத்தப்பட்டார். மிகக் கொடுமையான தேசங்களிலும் இந்த சுவிசேஷத்தை மகிழ்ச்சியோடு பிரசங்கித்தார். இவை எல்லாவற்றின் மத்தியிலும் சபைகளுக்குரிய கவலை அவரை நெருக்கியது. இந்தப் பாடுகள் நிமித்தம் அவர் ஒரு போதும் துக்கப்பட்டதில்லை மாறாக மகிழ்ந்து களிகூர்ந்தார். அவரால் முடிந்த மட்டும் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுத்தார். எல்லாவற்றிற்கும் மேலே அவர் சபைகளுக்காகப் பட்டப்பாடுகள் மிக அதிகமாக இருந்தது. (கொலோசியர் 1:24 அப்போஸ்தலர் 20:24)

அப்போஸ்தலனாகிய பவுல் தனக்கு மரணம் நேரிடப் போகிறது என்று அறிந்தும், கடைசி வரைக்கும் சகோதரர்களுக்கு ஊழியம் செய்தார். அவருக்கு நெருங்கிய தோழனாக இருந்த தீமோத்தேயுடன் இருந்து வந்தார். அவரைத் தேற்றும் படியாக அநேக நிருபங்களை எழுதினார். அவர் அறுபத்தி ஆறு வயது சென்ற போது, நீரோ என்ற கொடூரமான ரோம அரசனால் சிறை பிடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார். நல்ல போராட்டத்தை போராட வேண்டும் என்று தீமோத்தேயுவுக்கு கடிதம் எழுதினார். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். ஓட்டத்தை முடித்தேன் என்று தன்னுடைய வாழ்க்கைப் பயணத்தை முடித்தார். (11 தீமோத்தேயு 4:7) நீரோ மன்னனால் சிறைச் சேதம் பண்ணப்பட்டார் என்று வரலாற்று ஆசிரியர்கள் எழுதுகிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் மனம் மாறி இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொண்டது முதல் மரண பரியந்தம் வரை ஆண்டவரின் சேவையைச் செய்தார். தங்களுடைய வாழ்க்கை முழுவதும் ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து வாழ்வதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக பவுல் வாழ்ந்தார். அவர் இயேசுவையும் பிதாவையும் தவிர வேறு எதை குறித்தும் மேன்மை பாராட்டினது இல்லை. ஆனால் அவருடைய பெலவீனங்களைக் குறித்து மேன்மை பாராட்டினார். நிச்சயமாக சபையின் ஒரு முக்கியமான அஸ்திபாரமாகவும் ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராகவும் இருந்தார். (11 தீமோத்தேயு 4:7,8).





## பாடம் 14

## பன்னிரெண்டு அப்போஸ்தலரின் பணி தொடர்ந்தது

ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் மூலமாக ராஜ்யத்தின் சுவிசேஷம் பூமி எங்கும் அறிவிக்கப்பட்டது. (அப்போஸ்தலர் 1:8) வசனங்கள் மூலமாக அவர்கள் அநேக உபத்திரவங்கள் மத்தியிலும், வேதனைகள் மத்தியிலும், இந்த வாய்ப்பு கிடைத்ததற்காக மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள். இயேசு அனைவருக்காகவும் மரித்தார் என்றும் அவர் சமாதானத்தையும், ஜீவனையும் நித்தியமாக கொண்டு வரப்போகிறார் என்ற நற்செய்தியையும் பிரசங்கித்தார்கள்.

இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள் மட்டுமே நித்திய ஜீவனைப் பெறுவார்கள் என்று, சிலர் இந்நாள் வரைக்கும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பவுலின் வார்த்கைளின் படி நாம் பார்க்கும் போது உலகத்தின் சகல மக்களுக்கும் நித்திய ஜீவன் கிடைக்கும் என்று எழுதப்பட்டிருக்கிறது. (1 தீமோத்தேயு 4:10) ஆனால் இந்த அப்போஸ்தலர்கள் முழு உலகத்தையும் இப்போது மனம் திருப்புவது. தேவனுடைய திட்டத்தில் இல்லை. ஆனால் இந்த சுவிசேஷத்தை எல்லா இடத்திலும் பிரசங்கித்து. தேவனுடைய நாமத்தைக் கொண்டு உலகத்திலிருந்து மக்களை வெளியே அழைப்பதற்கு அனுப்பப்பட்டார்கள். ஆனால் அவர்கள் முழு உலகத்தையும் இந்த சுவிசேஷ யுகத்தில் மனம் திருப்புவது இயலாத காரியமாகும் அழைப்பைப் பெற்றவர்கள், தங்களையே ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்து ஆபிரகாமுக்குச் செய்த

உடன்படிக்கையை நிறைவேற்றக்கூடியவர்களாக இருப்பார்கள் (ஆதியாகமம் 22:16,18) ஏசாயா 26:9, (1 தீமோத்தேயு 2:6) இயேசுவையும் சீஷர்களையும் இந்த உலகம் முழுவதும் அறிந்திருக்கும் இவர்கள் உண்மையான சத்தியத்தை அறிந்து கொள்ளவில்லை. சிறு மந்தை மட்டுமே இந்த சத்தியத்தில் நிலைநிற்பார்கள் என்பது தேவனுடைய திட்டமாகும்.

இந்த சபைக்குரிய விசேஷமான கருவிகளாக 12 அப்போஸ்தலர்களும் நியமிக்கப்பட்டார்கள். நீங்கள் இந்த பூமியில் எவைகளைச் செய்கிறீர்களோ அவை எல்லாம் பரலோகத்திலும் செய்யப்படும். ஆகவே நாம் இந்த உலகத்தின் ஞானத்தை விட வேத வசனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இந்த 12 எளிமையான அப்போஸ்தலர்களும், ராஜாக்களை வசியப்படுத்தக் கூடியவர்களாகவும், மற்ற அனைவராலும் இந்நாள் வரைக்கும் புகழப்படத்தக்கவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுடைய சுய விருப்பத்தை எழுதாமல் பரிசுத்த ஆவியினால் எழுதப்பட்டதினாலே இவர்களுடைய எழுத்துக்கள் மிக வல்லமையுள்ளதாக இருக்கிறது. இந்த வார்த்தைகள் மனித வரலாற்றில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. இயேசுவின் அன்பைப் பற்றியும், அவர் அனைவரையும் விடுவிக்கப் போகிறார் என்பதையும் மக்களுக்கு உணர வைத்தார்கள்.

இப்போது நாம் ஒவ்வொரு அப்போஸ்தலர்களைப் பற்றியும் தனித்தனியாக வாசித்து அறிந்தோம். இயேசு பிரசங்கிப்பதற்கு இரண்டு பேராக அனுப்பினார் என்று நாம் வேதாகமத்தில் வாசித்து அறிந்திருக்கிறோம். ஒவ்வொருவருக்கும், அவரவருடைய பலவீனங்களும் பலங்களும் இருந்தது. எடுத்துக்காட்டாக பேதுரு மிகவும் துரிதமாக, சிந்திப்பதற்கு முன்பு செயல்படுவார். ஆகவே அவரோடு அமைதியாக இருக்கக்கூடிய அந்திரேயாவைக் கூட அனுப்பினார். இயேசு இரண்டு அபூர்ணமான மனிதர்களைக் கொண்டு ஒரு பூரணமான அறிவுள்ள மனிதனை சிருஷ்டித்தார். (புதிய சிருஷ்டி)

தேவன் அப்போஸ்தலர்களோடு அதிகமாகத் தொடர்பு வைத்திருந்தார். இயேசு அதிகமான பணத்தையோ மாற்று வஸ்திரங்களையோ எடுத்துச் செல்ல வேண்டாம் என்றார். அவர்கள் முழுமையாக தேவன் மேல் விசுவாசம் வைத்து, உலகப் பிரகாரமான நன்மைகளையும் அன்றாடத் தேவைகளையும் அவர் சந்திக்க வல்லவராக இருக்கிறார் என்று அறிந்துகொள்ளுவதற்காக இப்படிச் செய்தார். (பிலிப்பியர் 4:19) அவர்கள் சென்ற இடத்திலும் அவர்களுடைய தேவைக்கு மேலான காரியங்களைக் கேட்கக்கூடாது என்று கட்டளையிட்டார். தேவன் அவர்களுக்குக் கட்டளையிடும், இடம், பொருள், உணவு, தண்ணீர், பணம் , உடைகளை ஏற்று கொள்ள மனதுடையவர்களாக இருக்க வேண்டும். அப்போஸ்தலர்கள் இப்படி கீழ்ப்படிந்து, அனுபவத்தின் மூலம் முழுமையான விசுவாசத்தைப் பெற்றார்கள்.

இந்த 12 அப்போஸ்தலர்களும் சில காரியங்களில் ஒற்றுமையாக இருந்தார்கள். ஒரே தகப்பனாகிய யாக்கோபின் மூலம் சகல இஸ்ரயேல் ஜாதியும் உண்டாயின. அதே போல் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் இந்த பூமியில் அவருடைய அற்புதமான வேலைகளைச் செய்ய அழைக்கப்பட்டார்கள். ஒரு புதிய எருசலேம் பரலோகத்தில் ஆவிக்குரிய இஸ்ரயேலுக்காக ஆயத்தப்பட்டிருக்கிறது. (வெளி 21:14) அந்த நகரத்திற்கு 12 அஸ்திபாரக்கல்லுகளும் அதில் ஆட்டுக்குட்டியானவரின் 12 அப்போஸ்தலர்களின் நாமங்கள் பொருத்தப்பட்டிருந்தது.

இஸ்ரயேலின் 12 கோத்திரங்களும், ஆவிக்குரிய 12 கோத்திரங்களுக்கு ஒப்பிடலாம். யாக்கோபின் பன்னிரெண்டு பிள்ளைகளின் மூலம் முழு இஸ்ரயேல் ஜாதியாகப் பெருகினார்கள். ஆனால் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களைப் போல மாம்ச இஸ்ரயேலர்கள் கீழ்ப்படிதலும், விசுவாசத்தையும் அவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக அடிக்கடி முறுமுறுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய தேவைகளை தேவன் உடனே செய்யவில்லை என்று கோபப்பட்டார்கள். இதன் மூலம் அவர்கள் இருதயம் கடினப்பட்டு ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாக மாறுவதற்கான வாய்ப்பை இழந்தார்கள்.

அவர்கள் சுமையாக சுமந்த நியாயப்பிரமாணத்தில் இருந்து விடுதலை பெற்று இயேசுவுக்குள்ளாக சுயதீனத்தை அப்போஸ்தலர்கள் மூலமாகப் பெற்று கொள்ளும்படி வாய்ப்பை இழந்தார்கள்.

ஆகவே நாம் இவர்கள் மூலமாகப் பெற்ற சத்தியங்களையும் ஆசீர்வாதங்களையும் நன்றியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையில் இயேசு மிக அற்புதமாகப் பராமரித்து, எளிமையான மக்களை தேவனுடைய விசேஷமான வேலைகளை செய்யும் வேலைக்காரராக மாற்றினார். அவர்களுடைய கடுமையான உழைப்பினால் இன்றைக்கு நம் கையில் வேதாகமத்தை வைத்திருக்கிறோம். இயேசுவின் இரண்டாம் பிரசன்னத்தில், இந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் பரலோகத்தில் இயேசுவின் அருகில் தேவனோடு இருக்கிறார்கள். சீமோன் பேதுரு, அந்திரியா, யோவானுடைய சகோதரன யாக்கோபு, யோவான், பிலிப்பு, நாத்தானியேல் தோமா, மத்தேயு. சிறிய யாக்கோபு, ஸ்காரியோத் அல்லாத யூதா, கானானியனாகிய சீமோன், பவுல் இந்த அற்புதமான மனிதர்கள் இன்றைக்கு மகிமை அடைந்து ஆவிக்குரிய நிலையில் அழியா வாழ்வைப் பெற்று நித்தியமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாம் இவர்களைப் பற்றி அறிந்ததினால் அவர்கள் என்றுமே கனத்திற்குரியவர்கள் என்று உணரலாம். இவர்கள் எப்போதும் ஆட்டுக்குட்டியானவருடைய சபைக்கு அஸ்திபாரமாக இருந்து கொண்டு இவர்களுடைய பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள்.

